ச. கணேசலிங்கன்

# குந்தவிக்குக் கடிதங்கள்



# குந்தவிக்குக் கடிதங்கள்

செ. கணேசலிங்கன்

விற்பனை உரிமை :

பாரி நிலையம்

184, பிராட்வே, சென்னை-600108

முதற்பதிப்பு : ஏப்ரல் 1983
திருத்திய முதல் பதிப்பு : அக்டோபர் 1987
©

விலை ரூ. 6-00

## காணிக்கை

விஞ்ஞான சோஷலிசத்தை ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தி, தொடர்ந்து கற்பதில் ஆர்வ மூட்டிய தோழர் என். சண்முகதாசன் அவர்கட்கு

வெளியீடு :

குமரன் பதிப்பகம்
13/2 கஜபதி தெரு
சென்னை-5

அச்சிட்டோர் :
மாருதி பிரஸ்,
173, பீட்டர்ஸ் ரோடு,
சென்னை-14.

## சில கருத்துக்கள்

எட்டு ஆண்டுகளின் முன்னர் ஏழை விவசாயிகள், தொழிலாளர்களுக்கு விஞ்ஞான சோசலிசம்பற்றி எளிமையாக விளக்கும் பணியில் ஈடுபட்டிருந்தேன். அவ்வேளை அவர்களிடம் படிக்கத் தரக்கூடிய தமிழ் நூல்களையும் தேடினேன். கையில் கிடைத்த யாவும் வளர்ந்தவர்களுக்குப் பயன்படக் கூடியதாகவே இருந்தன.

அவ்வேளையே, படிப்பறிவுக்கு வாய்ப்புக் கிட்டாத தொழிலாள, விவசாயிகளுக்கும் மற்றும் மாணவர்க்கும் பயன்படக்கூடியதாகச் சிறு நூல் ஒன்று வெளியிட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது.

என் மகள் குந்தவி 10ஆம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். அவளை மனத்தில் வைத்துக்கொண்டே கடித வடிவில் இச்சிறு நூலை எழுதினேன். இற்றைவரை நூலாக வெளியிட வாய்ப்பு ஏற்படவில்லை.

வரலாற்றை முதன்முதலில் விஞ்ஞான மயப்படுத்திய மாபெரும் சிந்தனையாளரான கார்ல் மார்க்ஸ் (1818—1883) மறைந்த நூற்றாண்டு இவ்வாண்டு. அவ்வாண்டின் நினைவாக இன்று இந்நூலை வெளியிட வாய்ப்பு ஏற்பட்டது மகிழ்ச்சியே.

மனித இனம் தோன்றி வளர்ந்த காலத்திலிருந்து வாழ் நிலைக்கேற்பச் சிந்தனையும் வளர்ந்து வந்துள்ளது. மனித வரலாற்றில் சமுதாயத்தின் உந்து சக்தியாயிருந்த சிந்தனை

யாளர் பலரையும் நாம் அடிக்கடி நினைவு கூர்கிறோம்; பாடசாலையிலும் கல்லூரியிலும் வரலாறு, இயற்கை விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம், சித்தாந்தம் ஆகிய பாடங்களைக் கற்கும்போதும் வீர புருஷர்களான அச்சிந்தனையாளர்களை நினைவில் வைத்துப் போற்றுகிறோம்.

கிரேக்க அறிஞர்களில் தாலஸ் (கி. மு. 640—550) பைதோகரஸ் (கி. மு. 582—507) ஆகியவர் முதன் முதலில் கணிதத்தை விஞ்ஞான முறையில் காண்பதற்கு வழி வகுத்தவராவர். இவர்களது விஞ்ஞான அணுகு முறையைத் தொடர்ந்து சாக்கிரட்டீஸ் (கி. மு. 469—399), அவர் மாணவர் பிளேட்டோ (கி. மு. 427—347) விவாத முறையில் கருத்துகளைத் தர்க்க ரீதியாக, பகுத்தறிவை முன் வைத்து ஆராயும் சித்தாந்த முறை ஒன்றை ஆரம்பித்தனர்.

அடுத்த கட்டமாகக் கொப்பனிக்கஸ் (கி.பி. 1473—1543) வானத்தையும் பிரபஞ்சத்தையும் ஆராய்ந்து உலகம் என்பது சூரியனைச் சுற்றிவரும் சிறிய கோளம் என்பதை நிரூபித்தார். அவர் வரை பிரபஞ்சத்தின் மையம் உலகமே என்று கருதப்பட்டு வந்தது.

பின்னர், இத்தாலிய கலீலியோ (கி. பி. 1564—1642) ஆங்கிலேய நியூட்டன் (கி. பி. 1642—1727) பௌதிகவியல் என்பதைக் கணிதத்துடன் இணைத்து விஞ்ஞானமயப்படுத்தினர். இதையொட்டி இயக்க மறுப்பியல் (மெட்டா பிசிக்ஸ்) என்ற சித்தாந்தமும் தோன்றியது.

சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதிவரை மனிதன் தோன்றிய காலம்பற்றிய காரசாரமான விவாதம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. பைபிள் கருத்துகளே அவ்வேளையும் முதன்மை பெற்றிருந்தன. 6000 வருடங்களின் முன்னரேயே கடவுள் மனிதனைப் படைத்தார் என்ற மதவாதிகளின் கருத்தே வலுப்பெற்றிருந்தது (டார்வினே இம்மதவாதிகளுக்கு அஞ்சினார். 'உயிரினத்தின் தோற்றம்' என்ற தமது நூலை 1842 வரையில் எழுதிய போதும் 1859

ஆம் ஆண்டிலேயே வெளியிட்டார்) நூறு கோடி வருடங்களுக்கு மேலாக ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியே உலகமும் உயிரினங்களும் என டார்வின் (கி. பி. 1808—1882) நிரூபித்தார்.

சிக்மன் பிராய்டு (கி. பி. 1856—1939) மனித மூளையின் சிறு பகுதியே நனவு மனம் எனவும் பெரும் பகுதி நினைவிலி மனம் எனவும் நிரூபித்ததும் ஒரு கருத்துப் புரட்சியே. (கருத்தியல்கள் யாவும் நினைவிலி மனம் சார்ந்தவை)

கார்ல் மார்க்ஸ் (கி. பி. 1818—1883) என்ற மாமேதை முதன் முதலில் வரலாற்றை விஞ்ஞான முறைக்குட்படுத்தினார். அதுவே வரலாற்றுப் பொருள்முதல்வாதம் ஆகும். இதையொட்டி முதன்முதலாக ஒரு புதிய சித்தாந்தத்தையும் வகுத்தார். அதுவே இயக்கவியல் பொருள்முதல்வாதம் என்பதாகும்.

இவ்வார்த்தைகளைக் கண்டு பயந்துவிடாதீர்கள். சமூக விஞ்ஞானம் என்ற பாடத்தில் *பாடசாலைகளிலே இவற்றைக் கற்பிக்கத் தவறி விட்டார்கள். அதனாலேயே பலருக்கும் இவ்வார்த்தைகள் புதிதாக, அச்சம் தருவதாக உள்ளன.

மன்னர்களின் வரலாற்றையே மனித வரலாறு என்று பாடசாலையில் கற்றிருப்பீர்கள். இப் புதிய வரலாறு மனித வரலாற்றை உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சி, மனித உழைப்பின் வளர்ச்சியோடு கற்பதாகும். உதாரணமாக, கொரில்லா என்ற மிருக நிலையிலிருந்தவன் கையில் கிடைத்த கல்லை எடுத்து மற்றொரு கல்லின்மேல் தேய்த்துக் கூராக்கி உணவு தேடுவதற்கும் தற்காப்பிற்கும் பயன்படுத்துகிறான். பின் கற்கோடரி செய்கிறான்.

அதன்பின் கல்லைத் தேய்க்கும்போது, ஏற்படும் நெருப்பை உண்டாக்கினான். மலைப்பகுதியில் நெருப்பை எரிக்கும்போது தோன்றிய திராவகம் வளைந்து தரும் வலிமையான உலோகமாவதைக் காண்கிறான். செம்பைக்

கண்டுவிட்டான். வெட்டுவதற்கு நிலத்தைக் கீறிப் பயிரிடுவதற்குப் பயன்படுத்துகிறான். பின்னர் இரும்பைக் கண்டு காய்ச்சி உருக்குகிறான். கலப்பை, கத்தி, வேல், கோடரி, ஈட்டி, சுத்தியல் போன்ற உறுதியான கருவிகள் அவனது வாழ்வை எளிதாக்கி வளப்படுத்தின. இன்றைய மனிதனின் வளர்ச்சி யாவும் 7000 ஆண்டுகளின் முன் செம்பைக் கண்டு பிடித்து, 3500 ஆண்டுகளின் முன் இரும்பைக் காய்ச்சி ஊற்றப் பழகிய மனிதனின் உயர்வேயாகும்.

இவ்வுற்பத்திக் கருவிகளின் வளர்ச்சியோடு மனித உழைப்புச் சேர்ந்து, பொருள் உற்பத்தியில் ஈடுபட்டிருந்த காலத்தை மார்க்ஸ் வகைப்படுத்தி, எதிர்காலத்தில் மனித சமூகம் எத்தகைய வடிவம் எடுக்கும் என்பதையும் சொல்லி வைத்தார். பொருள் உற்பத்தியில் மனிதன் ஈடுபடுவதை உற்பத்தி உறவு என்பர்.

மனித சமூக வரலாற்றை மார்க்ஸ் ஐந்து வகையாகப் பிரித்துக் கூறினார் :

(1) தொன்மைப் பொது உடைமை—மனிதன் குழுக்களாக—குலங்களாக வாழ்ந்தகாலை, கருவிகளும், உணவு, உடை, இருப்பிடமாகத் தேடியவை யாவும் அனைவருக்கும் பொதுமையாக இருந்தன.

(2) அடிமை உடைமை—நிலத்தை எஜமானர்கள் சொந்தமாக்கிப் பெரும்பாலான மக்களை ஆடு மாடுகள் போல விலங்கு பூட்டிவைத்து உழைப்பின் பயன் யாவையும் தாம் உழைப்பில் ஈடுபடாது அபகரித்துக் கொண்டனர்.

(3) நிலவுடைமை—நிலப்பிரபுக்கள் நிலத்தையும் நீரையும் கருவிகளையும் சொந்தமாக்கி மக்களை நிலத்திற்கு அடிமையாக்கி உழைக்கச் செய்தனர்.

(4) முதலாளித்துவம்—இயந்திர சாதனங்களை முதலாளிகள் தம் உடைமையாக்கித் தொழிலாளர்களைக் கூலிக்கு அடிமையாக்கி வைக்கும் முறை.

(5) **சோசலிசம்**—உற்பத்திச் சாதனங்களைத் தொன்மைப் பொதுவுடைமை போல மீண்டும் மக்களுடைமையாக்கி அனைவரும் சமுதாயம் முழுவதுக்கும் பயன்பட உழைப்பதாகும். கை விலங்கிற்கும் நிலத்திற்கும் கூலிக்கும் அடிமைப்பட்ட மனிதன் இச்சமூக அமைப்பில் விடுதலை பெறுகிறான்.

சமுதாயம் மாற்றமடைந்து வருகிறது; மனித சிந்தனை வளர்ச்சியடைகிறது; முரண்பாடுகள் சமூக வளர்ச்சியில் தவிர்க்க முடியாதவை; வளர்ச்சியை ஒட்டி முரண்பாடுகள் தீர்க்கப்படுகின்றன என்ற சித்தாந்தமே இயக்கவியல் பொருள் முதல்வாதம் என்பதாகும். மார்க்ஸ் வரை பிரபல்யமாயிருந்த சித்தாந்தம் இயக்க மறுப்பியல் என்ற சித்தாந்தமாகும்.

மார்க்ஸ் தன் சித்தாந்தத்தை மேலும் எளிதாக்கிப் பின் வருமாறு கூறினார்—'இதுவரை வாழ்ந்த சித்தாந்திகள் யாவரும் உலகத்திற்கு விளக்கம் கூறியவர்களே—அதை மாற்றுவதே எமது வினா' என்றார்—உலகத்தை, சமூகத்தை மாற்றும் சித்தாந்தம் அரசியற் செயற்பாடு என்று லெனின் விளங்கிக் கொண்டதோடு சமுதாயத்தை மாற்றும் புரட்சி அரசியலை நடைமுறைப்படுத்தினார். சீனாவில் மாவோவும் அவ்வாறே புரிந்து புரட்சியை ஏற்படுத்தினார்.

உலகில் மூன்றில் ஒரு பகுதி மக்கள் இன்று சோசலிச காலகட்டத்தில் புகுந்துவிட்டனர்; மற்றப் பகுதி மக்களும் சோசலிச சமூக அமைப்பை ஏற்படுத்திக் கொள்ளும் காலம் வெகு தூரத்திலில்லை. ஓரிரு நூற்றாண்டுகள்கூட மனித வரலாற்றில் நீண்ட காலமல்ல.

1848இல் மார்க்ஸ் 30 வயதாயிருக்கும்போது ஏங்கெல்ஸ் என்ற தம் நண்பருடன் ஓர் அறிக்கையை வெளியிட்டார். இவ்வறிக்கையில் முன்கூறிய வரலாறு பற்றியும் அவரது சித்தாந்தம்பற்றியும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. மக்களின் சமூக வாழ்வு, இயக்கவியல், வர்க்கப்

போராட்டம், பாட்டாளியின் புரட்சி, கம்யூனிஸ்டு சமுதாய சிருட்டி யாவையும் இச்சிறு நூல் கூறுகிறது.

"சமுதாயங்களின் வரலாறு அனைத்தும் வர்க்கப் போராட்ட வரலாறு" என்ற புதிய கருத்துடன் ஆரம்பமாகி முதலாளித்துவத்துக்கு அடுத்த சோசலிச சமுதாயத்தைப் படைக்க 'உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்' என்ற போர்க் குரலுடன், கம்யூனிஸ்டு அறிக்கை முடிவடைகிறது. இச்சிறு நூல் தொழிலாள வர்க்கத்தின் கைநூலாக இன்றும் நிலவுகிறது.

மார்க்ஸ் 1818 மே 5இல் ஜெர்மனியில் பிறந்தார். தந்தை யூத இன வக்கீல். மார்க்ஸ் சட்டம், வரலாறு, சித்தாந்தம் ஆகியவற்றைப் பெர்லின் பல்கலைக் கழகத்தில் கற்றார்.

1842இல் பத்திரிகை ஆசிரியரானார். இப்பத்திரிகை தடை செய்யப்பட்டது. 1843இல் ஜென்னி என்ற பெண்ணைத் திருமணம் செய்து பாரீஸ் சென்றார். அங்கு ஏங்கெல்சைக் கண்டு நண்பரானார். 1845இல் பாரீஸ் நகரிலிருந்து விரட்டப்பட்டு பிரஸல்ஸ் சென்றார். அங்கு தான் கம்யூனிஸ்டு அறிக்கை தயாரிக்கப்பட்டது. பெல்ஜியத்திலிருந்தும் புரட்சியாளன் என விரட்டப்பட, ஜெர்மனி சென்று மீண்டும் பத்திரிகை ஆசிரியரானார். அங்கிருந்து மீண்டும் நாடு கடத்தப்பட்டு பாரிஸ் சென்றார். அங்கிருந்து விரட்டிவிட லண்டன் சென்று இறக்கும் வரை வாழ்ந்தார்

நாடு விட்டு நாடாக விரட்டப்பட்டு மார்க்ஸ் வறுமையிலேயே வாழ்ந்தார். ஏங்கெல்ஸ் அவருக்கு ஓரளவு உதவினார். இரு பெண் குழந்தைகளை வறுமைக்குப் பலியிட்டார். மனைவி ஜென்னி தன் நண்பருக்கு ஒரு குழந்தையின் மரணம் பற்றிய எழுதிய கடிதத்தில் 'பிறந்த போது என் பிள்ளைக்குத் தொட்டில் கிடைக்கவில்லை. இறந்தபோது சவப் பெட்டியும் கிடைக்கவில்லை' என்று எழுதியிருந்தார்.

லண்டன் மியூசியம் நூலகத்தில் மார்க்ஸ் தன் முழு உழைப்பு நேரத்தையும் செலவிட்டார். 35 ஆண்டுகளாக உழைத்து "மூலதனம்" என்ற மாபெரும் ஆய்வு நூலை எழுதி முடித்தார். உலகப் பாட்டாளி வர்க்கத்தின் மிகப் பெரும் மூலதனமாக இன்றும் இருப்பது இந்நூலேயாகும்.

உலக வளர்ச்சிக்கு, சமுதாய வளர்ச்சிக்கு உந்து சக்தி தரக்கூடிய கோட்பாட்டை வகுத்த மாமனிதர் கார்ல் மார்க்சே யாவார். அன்னார் நூறு ஆண்டுகளின் முன்னர் 14.3-1883 அன்று மரணமடைந்தார். மறைந்த மூன்றாவது நாள் அன்னாரை அடக்கம் செய்த கல்லறையருகே நின்று அவரது நண்பரும் மற்றோர் உலக அறிஞருமான ஏங்கெல்ஸ் சோகத்துடன் தன் சிறிய உரையைத் தொடங்கினார்.

"மார்ச் 14ஆம் நாள் பிற்பகல் 2-45மணிக்கு நிகழ் காலத்தின் மாபெரும் சிந்தனையாளர் சிந்திப்பதை நிறுத்திக் கொண்டார்" என ஆரம்பித்து "அவரது பெயரும் சேவையும் யுகயுகாந்தரங்களுக்கு நிலைத்து நிற்கும்" என்று முடித்தார்.

உலகில் தோன்றிய உயர்ந்த சமூக விஞ்ஞானி பற்றிய ஏங்கெல்சின் கூற்று, பொய்யாகி விடவில்லை. உலகில் ஒடுக்கப்படும், சுரண்டப்படும் மக்களுக்குத் தலைமை தாங்கும் விஞ்ஞானியாக, சித்தாந்தியாக, தோழனாக அவர் இன்றும் வாழ்கிறார். இத்தகைய மாமனிதனை இவ்வாண்டில் நினைவு கூர்வது எமக்குப் புத்துணர்வும் செயலூக்கமும் தருவதாகும்.

இக்கடிதங்கள் மூலம் கூறப்படுவது மன்னர்களது வரலாறு அல்ல. மனித இன வரலாறு; விஞ்ஞான பூர்உமாகக் கூறப்படுகிறது. இன்று எம் நாட்டுப் பள்ளிகளில் கற்பிப்பது யாவும் கற்பனாவாத, கருத்து முதல்வாத வரலாறே. அதில் மன்னர்களே வரலாற்றின் கதாநாயகர்;

மக்களல்ல; உற்பத்திக் கருவிகளல்ல; அவற்றின் வளர்ச்சி யல்ல.

ஐக்கிய நாடுகள் சபையின் கல்விப் பகுதியினரே பொருளாதார வளர்ச்சியை—உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சியை ஒட்டியே வரலாற்றைக் கற்பிக்கும்படி வேண்டு கின்றனர். அவர்களால் தயாரிக்கப்பட்ட 'வரலாற்று நூல்' (History Book) என்ற நீண்ட திரைப்படத்தைப் பார்த்தவர் இவ்வுண்மையை அறிவர். இயக்கவியல் பொருள்முதல் வாத அடிப்படையிலேயே வரலாற்றை அத் திரைப்படம் அணுகுகிறது.

இச்சிறு நூல் மனித இன வரலாற்றை அதன் ஆழ, அகலத்துடன் அளக்கவில்லை; அதன் அணுகுமுறையைத் தொட்டுக் காட்டுகிறது. அவ்வளவே. எதையும் எளிமைப் படுத்தும்போது நாம் கூறும் பொருளின் ஆழத்தையும் காண முடியாது போகலாம். இந்நூல் அதற்கு விலக்கல்ல.

எட்டு ஆண்டுகளின் முன்னர் இச்சிறு நூலின் எழுத்துப் பிரதியைப் படித்து ஆலோசனைகளும் சிறு சிறு திருத்தங் களும் செய்வதற்குதவிய நண்பர்கள் தெய்வசுந்தரம்; கோவிந்தன் ஆகியோரை இந்நூல் வெளியிடும் இவ்வேளை நினைவு கூர்கிறேன். அன்று எழுதிய இதன் எழுத்துப் பிரதியின் முதற்படி தவறிவிட்டது. நகற் பிரதியை, சிரமம் பாராது நான்கு நாட்களிலேயே அச்சிட்டு உதவிய அச்சக உரிமையாளரும் நண்பருமாகிய திரு. ராமனுக்கும் அச்சகத் தொழிலாளர்கட்கும் என் நன்றி. 'புருப்' பார்ப்பதில் உதவிய நண்பர் திரு. அரணமுறுவலுக்கும் என் நெஞ் சார்ந்த நன்றி.

5 ஏப்ரல், 1983 — செ. கணேசலிங்கன்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | சில கருத்துகள் | ... 3 |
| 1. | இன்றைய சமுதாயம் | ... 13 |
| 2. | சமுதாயத்தின் தோற்றம் | ... 16 |
| 3. | உயிரினத்தின் தோற்றம் | ... 19 |
| 4. | மனிதனின் தோற்றமும் வளர்ச்சியும் | ... 22 |
| 5. | உபரி என்றால் என்ன? | ... 25 |
| 6. | உற்பத்திக் கருவிகள் | ... 28 |
| 7. | ஆதிமனிதனும் கலையின் தோற்றமும் | ... 31 |
| 8. | பண்டையக் கூட்டு வாழ்க்கை | ... 34 |
| 9. | குடும்பத் தலைவி | ... 37 |
| 10. | குலத் தலைவனும் தெய்வமும் | ... 41 |
| 11. | வர்க்கச் சமுதாயம் என்றால் என்ன? | ... 44 |
| 12. | அடிமைச் சமுதாயம் | ... 47 |
| 13. | அரசின் தோற்றம் | ... 50 |
| 14. | அடிமைகள் அடைந்த கொடுமைகள் | ... 53 |
| 15. | நிலவுடைமைச் சமுதாயம் என்றால் என்ன? | ... 56 |
| 16. | பண்டமும் பணமும் | ... 59 |
| 17. | வணிக வளர்ச்சி | ... 63 |
| 18. | அடிமை வணிகம் | ... 66 |
| 19. | ஐரோப்பிய மறுமலர்ச்சி | .. 68 |
| 20. | குடியேற்ற நாட்டு ஆட்சியின் தோற்றம் | .. 71 |
| 21. | இயந்திர உற்பத்தியின் வளர்ச்சி | .. 74 |
| 22. | முதலாளித்துவம் என்றால் என்ன? | .. 77 |
| 23. | மார்க்சிசம் என்றால் என்ன? | .. 80 |
| 24. | சோசலிசம் என்றால் என்ன? | .. 83 |
| 25. | கம்யூனிசம் என்றால் என்ன? | .. 86 |

# ஆசிரியரின் பிற நூல்கள்

## நாவல்கள்

பொய்மையின் நிழலில்

அயலவர்கள்

புதிய சந்தையில்

இளமையின் கீதம்

அந்நிய மனிதர்கள்

வதையின் கதை

மண்ணும் மக்களும்

போர்க்கோலம்

தரையும் தாரகையும்

செவ்வானம்

சடங்கு

நீண்ட பயணம்

## சிறுகதைத் தொகுப்புகள்

சிறுவர்க்கான சிந்தனைக் கதைகள்

கொடுமைகள் தாமே அழிவதில்லை

சங்கமம்

ஒரே இனம்

நல்லவன்

## ்ட்டுரைகள்

பெண்ணடிமை தீர

கலையும் சமுதாயமும்

குமரனுக்குக் கடிதங்கள்

மான்விழிக்குக் கடிதங்கள்

# 1. இன்றைய சமுதாயம்

அன்பிற்கினிய அருமை மகள் குந்தவிக்கு,

நீ பரீட்சையில் சித்தியடைந்த செய்தி அறிந்தேன். உள்ளம் பூரித்தேன். நேரில் நின்று வாழ்த்துக்கூற முடியாதது வருத்தமே. என் நெஞ்சு நிறைந்த வாழ்த்துகளை எழுத்திலேயே ஏற்றுக்கொள்.

மேலும் தொடர்ந்து 10ஆம் வகுப்பில் படிக்கவும். இரவில் நித்திரை விழித்துப் படிக்க வேண்டாம். பாடங்களை மனனம் செய்வதும் தவிர்க்க; இவை எனக்குப் பிடிக்காதவை என்பதை அறிவாய்தானே!

கல்வி, மூளையை வருத்துவதல்ல; பிறருடைய அனுபவங்கள், எண்ணங்களை நாமும் அறிந்துகொள்ள முயல்வதாகும். ஆகவே கல்வி நமக்கு ஆர்வமூட்டுவதாக அமைய வேண்டும். எமது சிந்தனைக்கும் உணர்வுக்கும் வலுவையும் மகிழ்ச்சியையும் தருதல் வேண்டும்.

ஆனால் இன்று கல்வியின் பெயரால் நடப்பதென்ன? ஏதோ ஒரு போட்டிக்கு உன்னையும் தயாராக்குகிறார்கள். வற்புறுத்திப் பலவற்றையும் உன் மூளையுள்ளும் புகுத்த முனைகிறார்கள். போட்டியில் நீ சிறிது தயங்கினால்... தண்டனை.

தண்டனை என்பது இருவகைப்படும்; ஒன்று உடலால் வருத்துவது, மற்றது சிந்தனையால் வருத்துவது. கட்டாயப் படுத்தி கற்பிப்பது என்பது இரண்டாவது வகை. இளமையில், மூளைக்குச் செய்யப்படும் கொடுமையாக இன்றையக் கல்வி முறை வளர்கிறது. இதுவும் ஒருவகை அதிகாரம் பெற்ற தண்டனையே.

நீ தூக்கம் வரும்போது பாடம் படிக்க முயல்வதைப் பார்த்து நான் வருந்துவதுண்டு. அதிகாலையில் எழுந்து பள்ளியில் தந்த வீட்டுப் பாடங்களை பதட்டத்தோடு செய்வதைப் பார்த்திருக்கிறேன். விரும்பியா இவற்றைச் செய்தாய்? அச்சமே காரணம். பள்ளியில் ஆசிரியர் திட்டுவார் என்ற பயம்; மாணவியர் முன்னிலையில் அவமதிப்பார் என்ற அச்சம்.

பல பாடசாலைகளில் உடலை வருத்துகின்ற தண்டனையையும் அளிக்கிறார்கள். சுதந்திரமாகவும் சுறுசுறுப்போடும் வளரவேண்டிய சிறுவயதில் தடியைக் காட்டி அடக்கி விடுகிறார்கள்.

வளர்ந்த பின்னர் துப்பாக்கியைக் காட்டி இன்றைய வர்க்க நீதியை நிலை நாட்ட முயல்கிறார்கள். அதற்கு ஆரம்பப் பயிற்சியாகத்தான் பாடசாலையில் பிரம்பைக் காட்டுகிறார்களோ என்று எண்ணிப் பார்க்கிறேன். நல்லவேளையாக உங்கள் பாடசாலையில் பிரம்படி இல்லை. பிறர் உன்னைத் தண்டிப்பதை நான் பொறுப்பேனா?

நானே உன்னை என்றுமே தண்டித்ததில்லையே. இல்லை. நினைவில் வருகிறது. ஒரு தடவை மட்டும் பொறுமையிழந்து உன்னைத் தண்டித்து விட்டேன். அதற்காகப் பின்னர் வருந்தினேன். உன்னிடம் நேரடியாக வருத்தம் தெரிவிக்கத் துணிவு ஏற்படவில்லை. நீ அழுதுவிட்டுத் தூங்கி விட்டாய். அவ்வேளையில் வந்து உன் தலையை வருடினேன். முதுகைத் தடவினேன். நீ அறியமாட்டாய்!

நீ சுதந்திரப் பெண்ணாக வளரவேண்டும். எவருக்கும் அஞ்சாது வளர வேண்டும். சமுதாயத்தில் நிலவும் அநீதி களைக் கண்டு எதிர்க்க வேண்டும். அவற்றைக் களையப் போராட வேண்டும். இவையே என் அவா.

நீ இப்போது வளர்ந்து விட்டாய். 10வது வகுப்பில் படிக்கப்போகிறாய். ஏன் இத்தகைய போட்டிப் பரீட்சைக்

கல்வி நடைபெறுகிறது? அறிவுக்காகக் கல்வி என்று கூறு கிறார்களே. வகுப்பிலே மாணவரிடையே கல்வியில் கூட போட்டியும் பொறாமையும் ஏன் உருவாக்குகிறார்கள்? கல்வியை முடித்து வெளியே வந்தால் வேலைக்காகப் போட்டி. இப்போட்டியில் 100ல் 10 பேருக்கே வெற்றி கிடைக்கிறது. இவர்களுக்கும் விரும்பியபடியான வேலை கிடைப்பதில்லை. மற்றைய 90 பேரின் கதி என்ன? கல்வி கற்பதற்காக அவர்கள் அடைந்த தண்டனைகள் எத்தனை? நித்திரை விழித்த இரவுகள்? வாழ்க்கைபற்றி அவர்கள் கண்ட கனவுகள்? கடைசியில் கிடைத்தவை...புதிய துன்பங் கள், மனவேதனைகள்...

நீயும் இவ்வேதனையான குதிரைப் பந்தயத்தில் ஈடு பட்டுப் பின் துன்பப்பட நேரப் போகிறதே என்ற அச்சமும் ஏற்படுகிறது. பரீட்சை வெற்றியின் மகிழ்வோடு துன்பமும் கலந்துள்ளது.

ஏன் இவ்வாறெல்லாம் நடைபெறுகிறது? தவறுகள் மீண்டும் மீண்டும் ஏன் தொடருகின்றன? பள்ளியில் 1ஆம் பிள்ளை, 10ஆம் பிள்ளை, 30ஆம் பிள்ளை, என தரம் பிரிக்கிறார்கள். இளம் மனதில் போட்டி, பொறா மையை ஏற்படுத்துகிறார்கள். போட்டியும் பொறா மையும் நிறைந்த இக்கல்வி அவசியமா?

இன்றைய சமுதாய அமைப்பை நீ ஆழ்ந்து கற்று அறிய வேண்டும். அதற்கேற்ற நாளும் வந்துவிட்டது. அதை அறிந்து கொள்ளின் புதிய அறிவு பெறுவாய். சிந்தனையில் தெளிவு ஏற்படும். கவலையும் நீங்கும்.

அன்பு நிறைந்த,
அப்பா

# 2. சமுதாயத்தின் தோற்றம்

அன்பு நிறைந்த மகளுக்கு,

இன்றைய சமூக அமைப்பைப் பற்றி நீ நன்கு அறிந்து கொள்ள வேண்டும். விஞ்ஞான முறைப்படிக் கற்றுக் கொள்ள வேண்டும். இதைச் சமூக விஞ்ஞானம் என்று கூறுவர். விஞ்ஞான முறை என்பது ஆய்வு கூடத்தில் இரசாயனம் கற்பிப்பார்களே அத்தகைய முறை. கூறப்படு பவை செய் முறையாகவும் நிரூபிக்கப் படவேண்டும். அதாவது சோதனைகள் மூலம் நிரூபிக்கப்படுவதே விஞ்ஞான முறையாகும்.

நீ நாலு, ஐந்து வயது சிறுமியாக இருந்த நாள்கள் நினைவு வருகிறது. இளங்கன்றுபோல் தெருவிலேயும் ஓடுவாய்; நிலத்தில் காண்பவற்றைக் காலால் அடிப்பாய்; கையிலே பிடித்து,' உன்னைப் பாடசாலைக்கு அழைத்துச் செல்வேன்.

அவ்வேளை தெருவில் காணும் சமுதாய ஏற்றத் தாழ்வுகள் யாவும் உனக்கு வியப்பாகத் தோன்றின; என்னைக் கேள்விகள் கேட்பாய். ஏனப்பா அவன் பிச்சை எடுக்கிறான்? ஏனப்பா ஏழைகளிடம் காசில்லை? சாதி என்றால் என்னப்பா? முருகக் கடவுளுக்கு ஏசு என்ன முறையப்பா? ஒன்றைத் தொடர்ந்து மற்றொன்று. ஏனப்பா ...ஏனப்பா...?

உன் அம்மாவைப் போலல்லாமல் நான் பொறுமை யோடு அவற்றிற்கெல்லாம் பதில் கூறுவேன்; பதில்களை முழுமையாகக் கிரகிக்கத்தக்க ஆற்றல் உனக்கு அப்போது ஏற்படவில்லை. ஆயினும் என்றுமே பொய்யான பதில் களைக் கூறி உன்னை நான் ஏமாற்றுவதில்லை. என்னால் முடிந்தவரை எளிமையாகவே விளக்கம் கூறுவேன். அவற்றையெல்லாம் பழங்கதைபோல் நீ மறந்திருப்பாய்.

பின்னர் கேள்விகள் கேட்பதையே நீ நிறுத்தி விட்டாய் சமூகத்தில் நீ காண்பவையெல்லாம் இயற்கை நிகழ்ச்சிகள், இவற்றை மாற்றி விட முடியாது என்று நினைத்தாயோ என்னவோ, ஆசிரியரும் சுற்றாடலில் உள்ளவரும் இவ்வாறான கருத்துகளை உன் சிந்தனையிலும் ஏற்படுத்தி விட்டனர்.

பள்ளிப் பாடங்களைப் பற்றி மட்டுமே பின்னர் நீ என்னிடம் கேட்பாய். அதுவும் தெளிவாக அறிந்து கொள்வதற்காக அல்ல. ஆசிரியருக்குப் பதில் கூறித் தப்புவதற்காகவேதான்.

பள்ளியில் அச்சிட்ட பாடப் புத்தகங்களை வாங்கும்படி வற்புறுத்துகின்றனர். அவற்றின் மேல் அசையா நம்பிக்கை ஏற்படுத்தி விடுகின்றனர். அதைத் தொடர்ந்து ஆசிரியர் கூறுவதெல்லாம் வேத வாக்காகிவிடுகிறது. ஆசிரியர் எல்லாம் அறிந்தவர் என்ற மதிப்பும் ஏற்படுகிறது. இப்பொழுதும் அத்தகைய எண்ணமே உன் சிந்தனையில் இருக்கலாம்.

மேலும் நீ தொடர்ந்து படிக்கிறாய் அல்லவா? உன் அறிவும் அனுபவமும் வளர்ச்சியடையும். அதன்மேல்தான் ஆசிரியர் மேல் எத்தகைய மூடபக்தி வைத்திருந்தோம் என்பதை உணர்ந்து கொள்வாய்.

நீ கற்ற பாடப் புத்தகங்கள், அவற்றை விளக்கிய ஆசிரியர் யாவரும் இன்றையச் சமுதாய அமைப்பைப் பேணுபவர்; அதைக் கட்டிக் காப்பவர்; அதற்காக மாதந்தோறும் கூலி பெறுபவர். ஆகவே அவர்கள் மூலமாகப் புதிய அறிவைப் பெறுவது சிரமமே.

சமுதாய வளர்ச்சிபற்றிய பல செய்திகளை அவர்கள் கற்பித்திருப்பார்கள். ஆயினும் அவர்கள் கற்பித்த விளக்கங்கள் சரியானவையல்ல. காலப்போக்கில் நீ அவற்றைப் புரிந்து கொள்வாய்.

"மனிதன் குரங்கிலிருந்து தோன்றியவன், ஆதிமனிதன் குகைகளில் வசித்தான். காடுகளில் அலைந்தான். காய்கனி களைப் புசித்தான். கல்லையும் மரக்கட்டையையும் ஆயுதங் களாகப் பயன்படுத்தினான். பின்னர் கவண் கல்லைக் கண்டான். அம்பு வில்லை உபயோகித்தான். நெருப்பைக் கண்டு பிடித்தான். மண் பாண்டம் கண்டான். செம்பைக் கண்டான். பல உலோகக் கருவிகள் பிறந்தன. இரும்பைக் கொண்டு கலப்பை செய்தான். நிலத்தை உழுது, தானியங் களை விளைவித்தான். இயற்கையை வழிபட்டான். அரசர் கள் தோன்றினர். கோவில்களைக் கட்டினர். நீதி வழுவாது செங்கோல் ஓச்சினர்." இவ்வாறுதான் சரித்திரப் புத்தகங்களில் படித்திருப்பாய். ஏதோ இயற்கையின் நிகழ்வு கள் போல் ஆசிரியரும் சொல்லித் தந்திருப்பார். ஆனால் இச் சம்பவங்களிடையே மறைந்திருக்கும் தொடர்புகளை விஞ்ஞானரீதியில் அவர்கள் விளக்கியிருக்க மாட்டார்கள்.

மேலே கூறிய சரித்திர உண்மைகளிடையேதான் மனித சமுதாயத்தின் இன்றைய வளர்ச்சிப் போக்கே மறைந்து கிடக்கிறது. சமுதாயத்தில் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகளும் புதைந்திருக்கிறது. அவற்றை உன் ஆசிரியர்கள் ஒருபோதும் கூறியிருக்க மாட்டார்கள். பெரும்பாலும் அவர்களே கற்றிருக்க மாட்டார். கற்றிருப்பினும் சொல்லித் தந்திரார். ஏன் தெரியுமா? அதனால் அவர்கள் வேலைக்கே ஆபத்து ஏற்படலாம். உனக்கு வியப்பாக இருக்கிறதா? ஆனால் இதுவே உண்மை.

அன்புள்ள,
அப்பா

# 3. உயிரினத்தின் தோற்றம்

அன்பு நிறைந்த மகளுக்கு,

கடவுள் ஆதாம் ஏவாளைப் படைத்தார். அவர்களது பரம்பரையே உலக மக்கள் என்று கிறிஸ்தவ மதம் கூறுகிறது.

கடவுள் உலகத்தைப் படைத்தார். மனிதன் உட்பட ஜீவராசிகள் அனைத்தையும் படைத்தார். இவ்வாறு பிற மதங்களும் கூறுகின்றன.

ஆரப்பா கடவுளைப் படைத்தது என்று நீ தினமும் கேட்பாய். நான் உலகத்தவர்தான் கடவுளைப் படைத்தார் என்பேன். மேலும் உலகின் தோற்றம், மனித உயிர்களின் தோற்றம் வளர்ச்சி பற்றி எல்லாம் சொல்லுவேன். அவற்றையெல்லாம் நீ மறந்திருப்பாய்.

உலகத்தின் தோற்றம், வளர்ச்சிபற்றி பல்வேறு கருத்துகள் உண்டு. நாம் விளக்கம் காண முடியாதவற்றை கடவுளின் தலையில் போட்டுவிடுகிறோம். அவ்வளவே. சென்ற நூற்றாண்டில் டார்வின் என்றோர் ஆங்கில உயிரியியல் விஞ்ஞானி தோன்றினார். மனித உயிரின் தோற்றம், வளர்ச்சி பற்றி விஞ்ஞான முறையான விளக்கத்தை அவர் உலகிற்குத் தந்தார். அவை மேலும் இன்று ஆராயப்பட்டு உலகத்தின் தோற்றம், வளர்ச்சிக்குச் சரியான—விஞ்ஞான முறையிலான விடைகள் கூறப்பட்டுள்ளன.

சூரியன் என்ற எரியும் கோளத்திலிருந்து பிளந்து வந்த பிண்டமே பூமி என்றும் இந்தப் பிண்டம்தான் பிரபஞ்சம் என்றும் உலகம் என்றும் அழைப்பார்கள். பூகோளப் பாடத்தை விளக்கிக் கூறும்போது இதைப் பல முறை உனக்குக் கூறியிருக்கிறேன். இந்தப் பிண்டம் அல்லது

பூமி பல நூறு கோடி வருடங்களுக்கு மேலாக வான மண்டலத்தில் சுழன்று கொண்டிருக்கிறது. காலப்போக்கில் அதன் வெப்பம் ஆறி வந்தது. சூரியனிலிருந்த தனிப் பொருட்களே (Elements) பூமியிலும் உள்ளன. அவற்றின் மாறிய சேர்க்கைகள் காலப் போக்கில் நிலம், நீர், கற்பாறை களைத் தோற்றுவித்தன. பின்னர் அமீபா போன்ற ஒரு செல் (Cell) உயிரணு தோன்றியது. அதன் வளர்ச்சி யிலேயே உயிரினங்கள் தோன்றின. நாலு கால் குரங்கு பரிணாம வளர்ச்சியில் கொரில்லா, சிம்பன்சியாக மாறியது. இவற்றை இயற்கை விஞ்ஞானப் பாடத்திலும் நீ படித்திருப்பாய். இவற்றை உயிரினக் காட்சிச்சாலையிலும் பார்த்திருப்பாய். கொரில்லாக் குரங்கு இரு கால்களில் நடக்க, ஓட நேர்ந்தபோது முதுகு நிமிரத் தொடங்கியது. இவ்வாறாக, பரிணாம வளர்ச்சியிலேயே மனிதன் தோன் றினான். இவ் வளர்ச்சிக்கே நூறு கோடி ஆண்டுகள் வரை சென்றிருக்கும்.

சூரியன் எப்படித் தோன்றியது என்று கேட்கிறாயா? அது அவசியமல்ல. சூரியனைப் போல பல கோள்கள் வான மண்டலத்தில் உள்ளன. அவற்றிற்குரிய காரணங்களை விஞ்ஞானிகள் காலப்போக்கில் விளக்கவே உள்ளனர். நம் ஆராய்வுக்கு எட்டாதவற்றையெல்லாம் கடவுளின் தலையில் கட்டிவிடுவது எளிதே. இது பகுத்தறிவுக்கு ஏற்ற முறை யல்ல.

சூரியன் எரிந்து கொண்டேயிருக்கும் கோளம். அதி லுள்ள தனிப் பொருட்கள் மட்டுமே பூமியில் உள்ளன. பூமியின் கர்ப்பத்துள் இன்னும் அக்கினிப் பிழம்பு உள்ளது. எரிமலையின் வாயிலிருந்து அக்கினி வெளியேறுவதை அறிந்திருப்பாய். அவ்வேளையில் பூமி அதிர்வும் ஏற்படு கிறது.

அமீபாவின் வளர்ச்சி உயிரினங்களின் பரிணாம வளர்ச்சி. குரங்கிற்கும் மனிதனுக்கு மிடையில் ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியின் ஒழுங்கு முறை யாவையும் விஞ்ஞானி டார்வின் சென்ற நூற்றாண்டில் நிரூபித்துக் காட்டினார். உயிரினத்தின் தோற்றம் என்ற அவரின் நூல் 1859இல் வெளிவந்தது. அதன் பின்னர் இன்று ஏற்பட்ட ஆய்வு வளர்ச்சி மிகப் பெரியது. பரந்தது. உயிரியல் பாடத்தை தேர்வுக்காக அல்லாமல் விஞ்ஞானக் கண்ணோட்டத்துடன் நீ சிறப்பாகப் படிக்கும்போது இவை யாவற்றையும் தெளிவாக அறிந்து கொள்வாய்.

உயிரினக் காட்சிச்சாலைக்கு அடிக்கடி வருவாயே. அப்போதெல்லாம் அதிக நேரத்தைக் குரங்கு, கொரில்லா, சிம்பன்சிகள் உள்ள பகுதியிலேயே கழிப்பாய். மிருகங்களிடையே இவை உனக்கு விசித்திரமாகத் தோன்றியதே காரணம். வாங்கி வந்த கடலையை நீ வீச, அவை பிடித்துக் கொள்ளுகின்றன. முன் கால்களைக் கையாக பயன்படுத்துவதே வியப்பானது. இல்லையா? கையை நீட்டிக் கடலையைப் பெற்று வாயில் போடுகின்றன.

முன்கால்களைக் கைகளாகவும் பயன்படுவதே குரங்கு இனத்தினது தனிச் சிறப்பாகும். இத்தகைய பரிணாம வளர்ச்சியே மனிதனாகக் காரணமாயிற்று. இது பற்றி இன்னும் விளக்கமாகக் கூறவேண்டும். அடுத்த கடிதத்தில் விளக்குவேன்.

அன்புள்ள,
அப்பா

# 4. மனிதனின் தோற்றமும் வளர்ச்சியும்

அன்பு மகளே,

சென்ற கடிதத்தில் குரங்கு இனம் மனிதனாகியதைச் சுருக்கமாகச் சொல்லியிருந்தேன்.

பண்டைக் குரங்கினம் தம் முன்கால்களை மடித்துத் தடியையோ கல்லையோ, பற்றிக் கொள்ளும் நிலை மிருக வளர்ச்சியின் ஓர் உயர்ந்த நிலையாகும். பற்றிக் கொண்ட அக்கல்லையோ தடியையோ தற்காப்பிற்கோ, உணவு தேடுவதற்கோ பயன்படுத்தும் நிலை அதனிலும் பார்க்க முன்னேறிய வளர்ச்சியாகும். உணவு தேடுவதற்குக் குரங்கினம் பயன்படுத்திய இத்தகைய தடியையும் கல்லையுந்தான் கருவிகள் என்பார்கள்; இவற்றை உற்பத்திக் கருவிகள் என்றும் கூறுவர். அத்தகைய கருவியைத் தன் தேவைக்கேற்ப மாற்றியமைக்கத் தொடங்கிய போது மனிதன் பிறந்து விட்டான். அவனே ஆதி மனிதனாவான். இயல்பாக ஏற்படும் இவ்வளர்ச்சியையே பரிணாம வளர்ச்சி என்கிறோம். மேற்கூறிய வளர்ச்சி ஏற்படவே ஒரு கோடி வருடங்களுக்கு மேலாக ஆகின என ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

உன் தம்பி குமரன் உன்னுடைய விளையாட்டுப் பொருட்களை ஒளித்து வைத்துக்கொண்டு உன் தலை மயிரையோ சட்டையையோபிடித்து இழுப்பானே. அப்போதெல்லாம் நீ "உந்தக் குரங்குச் சேட்டையெல்லாம் என்னிடம் காட்ட வேண்டாம்" என்று அடிக்கடி ஏசுவாய்.

அவ்வேளை உண்மையில் நீ என்ன கருதுகிறாய் தெரியுமா? அதில் ஒரு பெரிய உண்மையும் மறைந்திருக்கிறது. அவன் பயனில்லாதவற்றைச் செய்கிறான்; மற்றது உனக்கு வீணே தொல்லை தருகிறான். இவையே.

மனிதனது தனிச் சிறப்புகள் இரண்டு. ஒன்று பயனான கூட்டுழைப்பு; மற்றது கூட்டு வாழ்க்கை.

ஆதி மனிதன் தனக்கு உணவைத் தேடவும் தற்காத்துக் கொள்ளவும் தடியையும் கல்லையும் எடுத்தான். பின்னர் தனக்கு மேலும் வாய்ப்பாகப் பயன்பட கல்லை கூராக மாற்றி அமைத்தான்.

மூங்கில், மரக் கொம்புகளது அசைவையும் விசையையும் அவதானித்தான். கவண் கல்லையும் வில் அம்பையும் ஆக்கிக் கொண்டான். முன்னைவிட பாதுகாப்புடன் தூரத்திலிருந்தே மிருகங்களைத் தாக்க வழி கண்டான்.

காற்று வேகமாக வீசும் போது மூங்கில் மரங்கள் உராய்ந்து தீ பிடிக்கிறது. கற்களை ஒன்றோடு ஒன்று உராய்க்கும்போது தீப்பொறி பறக்கிறது. மனிதன் தீயைக் கண்டு பிடித்தான். நெருப்பில் வெந்த உணவுகள் வேகாத உணவிலும் பார்க்கச் சுவையாக இருப்பதைக் கண்டான். உணவை வேக வைத்து உண்ணத் தொடங்கினான்.

தீ மூண்டு எரியும் போது சில பாறைகள் உருகி கல்போல் திரண்டு நின்றது. இங்குதான் திடமான உலோகம் பிறப்பதைக் கண்டான். முன் பயன்படுத்திய கல் முதலான கருவிகளிலும் பார்க்கச் செம்பு வாய்ப்பாக இருப்பதைக் கண்டான். தட்டி, வளைத்துக் கருவிகள் செய்தான். அதை உணவு தேடுவதற்கும் தற்காப்பிற்கும் மேலும் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டான்.

மேலும் காலம் பல கழிந்தது. செம்பிலும் பார்க்க வலிய உலோகத்தைக் கண்டு பிடித்தான். அதுதான் இரும்பு. வலிமையான கருவிகள் செய்ய மேலும் வாய்ப்பாக

இருந்தது. இரும்புக் கண்டுபிடிப்பு சமுதாய வளர்ச்சியை விரைவுபடுத்த உதவிற்று. ஏன் இன்று இரும்பு இல்லாத ஒரு தொழிலைக்கூட நம்மால் கற்பனை செய்துகூட பார்க்க முடியாது. இன்றைய சமுதாய உற்பத்தியில் இரும்புக் கருவிகள் வகிக்கும் முக்கியப் பாத்திரத்திலிருந்து இரும்பின் பயன்பாட்டை நீ நன்கு உணர்ந்து கொள்வாய்!

முன்பெல்லாம் ஆடுமாடுகளை மேய்த்தும் புல் வெளிகளைத் தேடியும் மனிதன் அலைந்து திரிந்தான். உணவைத் தேடுதலே அவனது முதல் தேவையாக இருந்தது. இரும்பைக் கண்டதும் நிலையாக வாழத் தொடங்கினான். நீர் வசதியும் நிலவளமும் பெற்ற ஆற்றங்கரைகளில் குடியேறினான். நிலத்தை இரும்புக் கலப்பையால் கீறி உழுது தானியத்தை விதைத்தான்; வளர்ந்த பயிரைச் சில மாதங்கள் காப்பாற்றினான்; தானியம் விளைந்தது. அதை அறுத்துத் தூற்றிப் பிரித்துச் சேமித்து வைத்தான். அத்தானியம் அவன் உழைத்த காலத்திற்கும் மேலான காலத்திற்கு உண்பதற்குப் போதுமானதாக இருந்தது.

இது மனித வரலாற்று வளர்ச்சியில் மிகப் பெரியதொரு முன்னேற்றமாகும். இவ்வளர்ச்சி அவ்வளவு எளிதில் ஏற்பட்டதல்ல. கல்லைக் கருவியாய் ஆக்கியதற்கும் இக்காலத்திற்கும் இடையில் பல லட்சம் வருடங்கள் கடந்து விட்டன. வியப்பாக இருக்கிறதா?

இப்பொழுது மட்டும் எப்படியப்பா உலகம் வேகமாக வளர்ந்து வருகிறது என்று கேட்கிறாயா? அதுவும் உற்பத்திக் கருவிகளின் துரித வளர்ச்சியே. அது எப்படி ஏற்பட்டது? இவற்றிற்குரிய விடையை நீயே பின்னர் அறிந்து கொள்வாய்.

அன்புள்ள,
அப்பா

# 5. உபரி என்றால் என்ன?

அன்பிற்குரிய மகளே,

மனிதன் ஆற்றங்கரைகளில் நிலையாக வாழத் தொடங்கினான். நிலத்தை உழுது தானியத்தை விளைவித்தான். உழைத்த காலத்திற்கும் மேலான காலத்திற்கு உண்ணத்தக்க தானியம் விளைந்தது என்று முன்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். இக்காலத்திற்குத் தனி முக்கியத்துவமும் கொடுத்திருந்தேன். இதை மிகவும் தெளிவாக நீ கிரகித்துக் கொள்ளவேண்டும் என்பதற்காகவே மீண்டும் குறிப்பிடுகிறேன்.

ஆதி மனிதர் கூட்டாக உழைத்து, கூட்டாக வாழ்ந்தனர் என்று கூறினேன். ஒரு ஆற்றங்கரையில் ஒரு சிறு குழுவினர் குடியேறினர் என்று கொள்வோம். அவர்கள் யாவரும் சேர்ந்து நிலத்தை உழுதனர். தானியம் விதைத்தனர். காவல் காத்தனர். கடைசியில் அறுவடையும் செய்தனர். இவ்வேலைகளுக்காக நாலு மாதங்களாக உழைத்தனர். அறுவடை செய்த தானியம் ஏழு மாதங்களுக்கு உண்பதற்கு அவர்களுக்குப் போதுமானதாயிருந்தது. சுருக்கமாகக் கூறின் நாலுமாத உழைப்பில் ஏழு மாதத்திற்குப் போதுமான தானியம் கிடைத்தது. அதாவது மேலதிகமாக மூன்று மாத காலத்திற்கு கவலையில்லாது வாழ்வதற்கும் தானியம் கிடைத்தது. இதையே உபரித் தானியம் அல்லது உபரி என்று கூறுவோம்.

இந்த உபரித் தானியந்தான் மனித வாழ்க்கையையே மாற்றி அமைத்தது. தற்போது ஏழு மாத காலத்திற்கு

அக்குழுவினர் உணவு பற்றியே கவலைப்பட வேண்டிய தில்லை. மேலும் நாலு மாதம் உழைப்பின் மேலும் உபரி சேரும். இந்த உபரித்தானியம் மக்களின் சாப்பாட்டுக் கவலையை நீக்கியது. இதனால் அவர் நிலத்தை மேலும் விரிவாக்கவும், உற்பத்திக் கருவிகளை மேலும் வளர்த்தெடுக் கவும், தங்களுக்கு உடை தயாரிக்கவும், வீடு கட்டவும், போக்குவரத்திற்குப் பாதைகளை அமைக்கவும், ஆடிப்பாடி கலைகளை வளர்க்கவும் நேரம் கிடைக்கிறது. மேலும் உபரி நேரத்தால் அதிகமாகத் தானியம் மென்மேலும் விளைகிறது. இப்போதெல்லாம் நாலுமாதம் உழைக்க ஒரு ஆண்டுக்குத் தேவையான தானியம் கிடைக்கிறது. அதாவது 8 மாதம் உழைக்கத் தேவையில்லாமலே உண்ணத் தானியம் கிடைக் கிறதென்று இதற்குப் பொருள்.

இரும்பைக் கண்டதுமே மனிதன் கலப்பையைச் செய்து விடவில்லை. இரும்புத்துண்டால் நிலத்தைக் கீறியே தானி யத்தை விளைவித்தான். பின்னர் ஆழமாகக் கீறின் அதிக தானியம் விளையும் என அறிந்தான். ஏரைச் செய்து சில காட்டு விலங்கைப் பிடித்துப் பழக்கி வீட்டு விலங்காக் கினான். முதலில் மனிதனே கலப்பையை இழுத்து நிலத்தை உழுதான். அதன் பின்னர்தான் மாடுகளைப் பூட்டி உழுதான்.

உழைப்புக் கருவிகள் வளர்ச்சியடைய தானிய விளைச் சலும் அதிகரிக்கிறது.

மகளே, இப்போது நகரங்கள் எல்லாம் பெருகி வருகின்றன. உன்னைப் போலவே லட்சக்கணக்கானோர் நகரங்களில் வாழுகிறார்கள். அவர்களுக்கு உணவு எப்படிக் கிடைக்கிறது? கிராமங்களிலிருந்துதான் உணவு வருகிறது. இப்பொழுது உற்பத்திக் கருவிகள் மேலும் முன்னேற்ற மடைந்திருக்கின்றன. நீ கிராமத்தில் சென்று பார்க்கா விடினும் படித்திருப்பாயல்லவா?

ஆழ உழுவதற்கு யந்திர டிராக்டர்கள் வந்து விட்டன. தண்ணீர் இறைக்க மோட்டார் பம்செட் வந்து விட்டது.

மேலும் இரசாயன உரம், கிருமிநாசினி ஆகியவையும் உற்பத்தியை உயர்த்த உதவுகின்றன.

அப்படியானால் ஏனப்பா இன்னும் சாப்பாடு இல்லாமல் பட்டினியால் சிலர் சாகிறார்கள், பலர் பிச்சை எடுக்கிறார்கள் என்று நீ கேட்கக் கூடும்! அதற்குக் காரணம் ஆதியில் எல்லோருக்கும் பொதுவாக இருந்த நிலம், நீர், பிற உற்பத்தி சாதனங்கள் எல்லாம் சிலரின் தனியுடைமையாக ஆனதால் நேர்ந்ததாகும். இன்றும் நிலமும் நீரும் சில கருவிகளும் ஏழை மக்களுக்குக் கிடைக்கச் செய்தால் உலகில் எவரும் பட்டினி கிடக்கவே நேரிடாது. எம் நாட்டிலும் இன்றுங்கூட பாதிக்கு மேற்பட்ட மக்களிடம் உழைப்புக் கருவிகள் இல்லை; உழைக்கக்கூடிய இரு கரங்கள் தவிர வேறு எவ்விதச் சொத்தும் அவர்களிடம் இல்லை.

சங்க காலத்தில் 'பசிப்பிணி மருத்துவன்' என்று அழைக்கப்படும் ஒரு நிலக்கிழார் மக்களின் பசியைப் போக்க அன்னதானம் செய்தான். மணிமேகலை காவியம் பாடிய சாத்தனார் மக்களின் பசியைப் போக்க அட்சய பாத்திரம் தந்தார். சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த வடலூர் இராமலிங்க வள்ளலார் அன்னசாலைகள் அமைத்தார். நம் காலக் கவிஞன் பாரதி ஒவ்வொரு மனிதனின் உணவிற்கும் உத்திரவாதம் கொடுக்க வேண்டும் என்றார். அவரே தனியொருவனுக்கு உணவு கிடைக்காவிட்டால் இவ்வுலகத்தையே அழித்துவிடுவது மேல் என்று சாடினான்.

இப்போது ஒன்றுமட்டுமாவது உனக்கு உறுதியாக புரிந்திருக்கும். உற்பத்திக் கருவிகள் வளர்ச்சியடைந்து வந்திருக்கின்றன. நீ உண்பதற்கு வேண்டிய உணவைக் கிராமப்புறத்தில் வேறு ஒரு பகுதியினர் உபரியாக உற்பத்தி செய்து வழங்குகின்றனர். இதிலே ஒரு பெரிய சித்தாந்தமே அடங்கியிருக்கிறது. அது என்ன? அடுத்த கடிதத்தில் கூறுவேன்.

அன்புள்ள,
அப்பா

# 6. உற்பத்திக் கருவிகள்

அன்பான மகளுக்கு,

உற்பத்திக் கருவிகள் என்றால் என்ன என்று விளக்கம் கேட்டு எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறாய். நல்லது. மகளே, உனக்குள்ள சந்தேகத்தைக் கேட்டுத் தெளிவு பெற விரும்புகிறாய். நன்று. மனிதர் உணவு தேடுவதற்கும் பாதுகாப்பிற்குமாக எடுத்துக் கொண்ட கருவிகளையே உற்பத்திக் கருவிகள் என்போம்.

தடி, கல், கூரான கல், கவண், அம்பு வில்லு, செம்பு உலோகத்தால் செய்யப்பட்ட கருவிகள், இரும்பால் செய்யப்பட்ட கருவிகள் என அக் கருவிகள் வளர்ச்சியடைந்து வந்துள்ளன. கருவிகள் வளர மக்கள் வாழ்க்கையும் வளர்ந்து வந்துள்ளது. சிந்தனையும் வளர்ந்து வந்துள்ளது.

இதைச் சுருங்கக் கூறின் மனிதன் தேடிக் கொண்ட உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சியே அவனது வாழ்நிலை வளர்ச்சியாகும். அவனது வாழ்நிலையே அவனது சிந்தனையின் வளர்ச்சியையும் ஆக்குகிறது.

மனிதனுக்கும் மிருகத்துக்கும் உள்ள அடிப்படை வேறுபாடுபற்றி இங்குச் சுருக்கமாகக் கூறுகிறேன். தன் தேவைக்கேற்ப உற்பத்திக் கருவிகளை ஆக்கிக்கொள்ள மனிதனால் மட்டுமே முடிந்தது. மிருகத்தால் அதைச் செய்ய முடியவில்லை. மிருகம் இயற்கையால் கிடைக்கும் பொருளை அப்படியே பயன்படுத்தும். மனிதன் அதனைத் தனது தேவைக்கேற்ப மாற்றிப் பயன்படுத்துவான்.

இக் கருத்தையே உன் அப்பாவும் கொண்டிருக்கிறார். இவ்வாறு கருதுவது ஒரு தனிச் சித்தாந்தம் அல்லது

மெய்ஞ்ஞான முறையாகும். உலகத்திற்கும் உலக மக்களது வாழ்க்கைக்கும் கொடுக்கப்படும் விளக்கம் பற்றிய துறையாகும்.

சாக்கிரட்டீஸ், அரிஸ்டோட்டில் பற்றி நீ படித்திருக்கலாம். பெற்றன் ரசல், சாத்ரே பற்றிப் படிக்காவிட்டாலும் மார்க்ஸ் பற்றி அறிந்திருப்பாய்தானே. மார்க்ஸ் மற்றவர்களைவிட வேறுபட்டவர். அவர் உலகத்திற்கு விளக்கம் கூறியது மட்டுமல்ல அதை எவ்வாறு மாற்றி அமைக்க முடியும் என்பதையும் விளக்கிக் காட்டியவர். இவைபற்றி, நீ பின்னர் விரிவாகப் படித்துக் கொள்வாய்.

மேலே கூறிய சித்தாந்த முறையையே பொருளியம் அல்லது பொருள் முதல் வாதம் என்று கூறுவர். அதாவது பொருளின் வளர்ச்சி அல்லது உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சியே மனித சிந்தனையை அல்லது வாழ்நிலையைத் தீர்மானிக்கிறது என்பதாகும்.

அப்போது இதற்கு எதிரான கோட்பாடு என்னப்பா என்று கேட்கிறாயா? அதையே கூற வருகிறேன்.

மனித சிந்தனையே முந்தியது; அதன் வளர்ச்சியே உற்பத்திக் கருவிகளையும் வளரச் செய்தது. உபரி உற்பத்திக்கு வழி செய்தது. சமுதாயத்தையும் வளர்த்தது. இவ்வாறு விவாதிப்பதையே கருத்தியம் அல்லது கருத்து முதல் வாதம் என்பர். நீ உன் பள்ளியிலும் பிறவிடங்களிலும் காணும் பெரும்பாலானோர் இக் கோட்பாடு கொண்டவரேயாவர்.

சரியாகக் கணக்கு செய்யாவிடின் அம்மா அல்லது உன் ஆசிரியர் 'மூளையிலே களிமண்ணா?' என்று சினப்பதைக் கேட்டிருப்பாய். தலையிலே மூளை என ஒரு பொருள் இருக்கிறது. களிமண் போலத் தொட்டுப் பார்க்கத் தக்க பொருள் மூளை. நீ ஏற்றுக்கொள்கிறாயா? அப்போது நீ

பொருளிய வாதி அல்லது பொருள் முதல் வாதி. கருத்திய வாதி அல்லது கருத்து முதல் வாதிகள் இதை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

பொருள்முதல்வாதம் கருத்துமுதல்வாதம்; இவ்விரு வகை சித்தாந்தங்களும் நீண்ட காலமாகவே நிலவி வந்தவை யாகும். மத வழிபாட்டை ஆதரிப்பவர்களெல்லோரும் கருத்துமுதல்வாதிகளே. மதவழிபாட்டை எதிர்க்கும் தமிழ் நாட்டிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தவர் கூட கருத்து முதல் வாதிகளே. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என அவர்கள் கூறுவர்.

உலகம் முதலில் உயிரற்ற பொருட்களையே கொண் டிருந்தது. அவற்றின் வளர்ச்சியிலேயே உயிரினங்களும் மனிதனும் தோன்றின. மனிதன் தன் மூளையின் பிரதிபலிப்பின் மூலமே பிற பொருட்களைக் காண்கிறான். திட, திரவ, வாயுபோன்ற பிற புறப்பொருட்களை ஐம்புலன் களினால், சிந்தனையால் உணர்கிறான். அதே போல தன் உழைப்பு, சமூக உறவுகளால் ஏற்படும் பாதிப்புகளையும் உணர முடிகிறது. இவையும் பொருள் சார்ந்தவையே. இத்தகைய சித்தாந்தத்தை ஏற்றுக் கொள்பவர்களே பொருள் முதல் வாதிகள்.

முன்னர் நான் எழுதிய முறையிலேயே கார்ல் மார்க்ஸ் என்பவர் மனித சமுதாய வளர்ச்சியைக் கண்டார். அவர் இவ்வளர்ச்சிப் போக்கிற்குப் புதியதோர் பெயரிட்டார். அதுவே இயக்கவியல் பொருளியம் அல்லது பொருள் முதல் வாதம் என்பதாகும். மேற்கூறியவற்றின் தொகுப்பே அது. மூன்று அம்சங்களை இச் சித்தாந்தம் கூறுகிறது. 1) உற்பத்திக் கருவிகளை வளர்ப்பதன் மூலம் மனிதன் இயற்கையை வெல்கிறான். 2) அதனால் சமுதாயம் வளர்ச்சி அடைகிறது. 3) மனிதனது சிந்தனை வளர்ச்சி யடைகிறது.

அன்புள்ள,
அப்பா

# 7. ஆதி மனிதனும் கலையின் தோற்றமும்

அன்பு நிறைந்த மகளுக்கு,

மனித குலத்தின் தனிச் சிறப்பு கூட்டாக உழைப்பதும் கூட்டாக வாழ்வதும் என்று முன்பே எழுதி இருக்கிறேன் அல்லவா? வெள்ளம், வரட்சி, புயல், பூமி அதிர்ச்சி, காட்டுத் தீ போன்ற இயற்கையின் கோரம் ஒரு புறம். கொடிய காட்டு மிருகங்கள் மறுபுறம். இவற்றிலிருந்து தப்பித்தான் பண்டைய மனிதன் உணவு தேடிக்கொள்ளவும் வேண்டும். உற்பத்திக் கருவிகளை வளர்த்துக் கொள்ளவும் வேண்டும். கூட்டாக உழைப்பதும் வாழ்வதும் அவர்களுக்கு பாதுகாப்பாக இருந்தது. ஆங்காங்கே சிறு சிறு குழுக்களாகவே பழங்குடியினர் வாழ்ந்தனர். காலப்போக்கில் குடிகள் வளர்ந்து பெருகின.

உன் பூட்டி தனது குடும்பத்தில் 57 பேர் உள்ளனர் எனப் பெருமையாகச் சொல்லுவார். அவருக்கு 8 பிள்ளைகள். 2 இறந்து விட்டன. பேரப் பிள்ளைகள் 23. பூட்டப் பிள்ளைகள் 27. பூட்டன் இறந்து விட்டார். 75 வயதிலேயே பூட்டி இறந்தார். இக்காலத்திலேயே ஒரு குடி எவ்வாறு வளர்ந்து விட்டது பார்த்தாயா?

பழைய காலங்களில் இத்தனை வேகமாகக் குடும்பம் வளர்வது அத்தனை சாத்தியமில்லை. ஏனெனில் பசி, பட்டினி, வெள்ளம், காட்டு மிருகங்கள், நோய்களிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளத்தக்கதாக அவர்களது கருவிகள் வளரவில்லை; அறிவு வளரவில்லை. அதனால் விபத்துகள், நோய்களினால் பலர் இளவயதிலேயே இறந்து விடுவர்.

பண்டைய மனிதர் மறைந்திருந்தே மிருகங்களைத் தாக்குவர். அன்று வேட்டையில் ஒரு புலியைக் கொன்று

விட்டனர். தாம் வாழ்ந்த குகைகளின் முன்னே புலியைப் போட்டனர். உணவு கிடைத்த மகிழ்ச்சியையும் வீரச் செயலையும் பார்க்க யாவரும் கூடுகின்றனர். கற்கோடரி, அம்பு, வில்லு, தடிகளுடன் கொன்ற புலியைச் சுற்றி வந்து அனைவரும் ஆடுகின்றனர். ஒரே குரலில் ஒலி எழுப்புகின்றனர். தமது ஒற்றுமை, வீரச் செயலைக் காட்டும் குரல். அன்றைய உழைப்பு தந்த அனுபவமும் பூரிப்பும் அசைவுகளாகவும் சந்தமுள்ள ஒலியாகவும் எழுகிறது. எவ்வித கட்டுப்பாடுமேயில்லை. சுதந்திரமாகத் தமது அனுபவ உணர்வுகளை வெளிப்படுத்துகின்றனர். அதன் மூலம் மேலும் ஒற்றுமையும் வீரமும் பெறுகின்றனர். இப்படித்தான் மகளே பண்டையக் கலை பிறந்தது!

இவ்வாறு இயல்பாக வெளிப்பட்ட ஆட்டமே காலப் போக்கில் கூத்து, நடன வடிவம் பெற்றது. இயல்பாக எழுந்த ஒலியேஇசை, கவிதை வடிவம் பெற்றது.

கலை உணர்வு என்பது ஆதிமனிதனிடமும் இருந்தது. அவனது அனுபவ உணர்வுகளை அசைவு, ஒலி, ஒவியம் போன்ற வடிவங்களில் கொடுத்தான். அவற்றை ஒழுங்கு படுத்தி வளர்ப்பதற்கேற்ற ஓய்வு அவனுக்குக் கிடைக்க வில்லை. உணவைத் தேடிச் சேகரிப்பதிலும், பாதுகாப்பாக வர்ழவழிகாண்பதிலுமேஅவனது நேரமெல்லாம் கழிந்தது.

நீ பழகும் பரத நாட்டியமும் ஆதிக் குடியினரது ஆட்டத் தின் வளர்ச்சியே ஆகும். அதற்கும் இதற்கும் ஒரே ஒரு அடிப்படை வேறுபாடு. அவர்கள் இயல்பாகத் தமது அனுபவ உணர்வுகளை ஆட்ட மூலம் வெளிப்படுத்தினர். எவரும் வற் புறுத்தவில்லை; அது சுதந்திரமான கலை. ஆனால் நீ ஆடும் போது உனது அனுபவ உணர்வுகளையா வெளிப்படுத்து கிறாய்? அல்லது பெரும்பாலான சமுதாய மக்கள் உணர்வு களையா வெளிப்படுத்துகிறாய்? இல்லவே இல்லை; நடன ஆசிரியர் காட்டித் தந்தவற்றை விருப்பு வெறுப்பின்றி ஆடிக் காட்டுகிறாய். நீ அபிநயம் பிடிக்கும்போது அழகாகத் தான் இருக்கிறது. ஆனால் தெய்வத்திற்காக எதையோ

கடமையாகச் செய்வதுபோலப் பாடப்படுகிறது. இது சுதந்திரமற்ற கலையாகும். பிறரின் தேவைக்காக நீ ஆடுகிறாய்.

அன்று பண்ட உற்பத்தியில் பங்கு பெற்ற மக்களே கலைகளைப் படைப்பவர்களாகவும் இருந்தனர். அதாவது உழைக்கும் மக்களே கலைஞர்களாக இருந்தனர். அதனால் கலை உயிர்த் துடிப்புடனும் சுதந்திரமாயும் இருந்தது.

உன் அசைவுகள் ஒழுங்காகத் தாளலயத்தோடு ஒத்திருக்கின்றன. இது பரத நாட்டியத்தின் உருவ வளர்ச்சி மட்டுமே ஆகும். உள்ளடக்கம் என்பது அனுபவ உணர்வுகள். நீ காட்டும் அனுபவ உணர்வுகள் போலியானவை. அதனாலேயே கலை முற்றுப் பெறவில்லை.

கலை என்பதை ஒரு மயக்கம் தரும் போதைப் பொருளெனப் பலர் எண்ணுகின்றனர். அதன் சிறப்பையும் பலர் மறைக்கின்றனர். காலப் போக்கிலே அதன் சமுதாயப் பணியை நீ உணர்ந்து கொள்வாய். அவ் வேளையில் நீயே சிறந்த ஆடற்கலையைப் படைத்து அளிக்க முடியும்.

கூட்டுழைப்பும் கூட்டு வாழ்வும் போலக் கலையும் கூட்டாக ஆதிமக்களிடம் வெளிப்பட்டதைப் பார்த்தாயா? இன்று ஒருவர் ஆட, பலர் பணம் கொடுத்துப் பார்ப்பதும் சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தைக் காட்டுகிறதல்லவா?

ஏன், எவ்வாறு இத்தகைய மாற்றம் ஏற்பட்டது அப்பா, என்று கேட்கிறாயா? அதற்குப் பதில் கூறுகிறேன். மகளே! மனித வரலாற்றில் உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சியோடு மனித உறவுகளின் வளர்ச்சியும் வளர்ந்து வந்தன. இவை வெவ்வேறு சமுதாய அமைப்புகளையும் மனித வரலாற்றில் ஏற்படுத்தின. அவற்றையே திரும்பப் பார்க்கப் போகிறோம்.

அன்புள்ள,
அப்பா

# 8. பண்டையக் கூட்டு வாழ்க்கை

இனிய மகளுக்கு,

பண்டைய மக்களது வாழ்க்கை இன்று உனக்கு அநாகரிக மாகத் தோன்றலாம். எனினும் நீ அவ்வாழ்விலே உள்ள சிறப்புகளை கூர்ந்து பார்க்கும்போது தெரிந்துகொள்வாய்.

கூட்டாக வேட்டையாடிப் புலியைக் கொண்டுவந்தார் கள்லவா; அதுவே அவர்களது அன்றைய உழைப்பு. அதன் இறைச்சி அனைவரிடையேயும் சமபங்காகப் பங்கிடப்படு கிறது. தனியாக எவருக்கும் சொத்து கிடையாது. அது பற்றி எவரும் நினைத்ததே கிடையாது. உலகம், இயற்கை அனைத்தும் அவரது சொத்தாக இருந்தது. உற்பத்திக் கருவிகளும் பொதுச் சொத்தாகவே இருந்தது.

எல்லோரும் தமது திறமைக்கேற்ப உழைத்தனர்; வேட்டைக்குப் போக முடியாத முதியவர் உற்பத்திக் கருவி களைச் செய்வது, தோலைப் பதனிடுவது ஆகியவற்றைக் கவனித்தனர். ஆடுமாடுகள், குழந்தைகள், நோயாளர் களைப் பெரும்பாலும் பெண்கள் பேணினர். உணவையும் அவர்களே பங்கிட்டனர். இங்கு ஒருவித வேலைப்பிரிவினை ஏற்படுவது இயல்பே.

இத்தகைய கூட்டு வாழ்க்கையையே புராதன பொது வுடைமை சமுதாயம் என்று கூறுவர்.இங்குத் தனிச் சொத்து என எதுவும் கிடையாது. ஒருவர் உழைக்க மற்றவர் வாழ்வது. மேலும் விளக்கின், ஒருவரது உழைப்பை மற்றவர் பறித்து வாழ்வது என்ற நிலை கிடையாது. இது முற்றாகத் தற்போது புரியாது போகலாம். அதென்னப்பா ஒருவர் உழைப்பை மற்றவர் பறிப்பது என்று கேட்கிறாயா?

காட்டிலே புலியை அக்குடியினர் வேட்டையாடிக் கொண்டு வந்து விட்டனரல்லவா? அவ்வேளை வேறு ஒருவன் வந்து 'என்னுடைய காட்டிலே வேட்டை ஆடினாய். இறைச்சியில் பாதியை எனக்குக் கொடு' என்று கேட்கிறான். கேட்பதென்ன பறித்துக் கொண்டே போய்விடுகிறான்.

புலி இறைச்சி அவர்களது கூட்டு உழைப்பு. அதில் பாதியைப் பறிப்பது என்பது அவர்களது உழைப்பைப் பறிப்பது போன்றதல்லவா?

இரண்டு நாட்களுக்குப் புலி இறைச்சி போதும். நாளை உணவுபற்றிய கவலையே இல்லை. இவ்வாறு அம் மக்கள் எண்ணியிருந்தனர். தற்போதைய நிலையில் மறுநாளும் உணவிற்காக வேட்டைக்குச் செல்ல வேண்டும். மறுநாளும் இறைச்சியில் பாதியை அவனே பறித்துக் கொண்டு போகிறான். இது நீதியா?

இது அநீதியாயின் இன்றும் நடைபெற்றுக்கொண்டிருக் கிறதே. இத்தகைய சுரண்டல்களை, அநீதிகளை எவரா லும் தடை செய்ய முடியவில்லை. இன்று வெவ்வேறு முறைகளாக உழைப்பு பறித்தெடுக்கப் படுகிறது. அவை பற்றிப் பின்னர் தெரிந்துகொள்வாய்.

இவ்வாறு, ஆதியில் சிறு குழுக்களாக வாழ்ந்தவர்களை முதலில் கணக்குழுவினர், தொல்குலத்தவர், தொல்குடியி னர், பழங்குடியினர் என்றெல்லாம் கூறுவர். உனக்கு எளிதில் புரியத்தக்கதாக **பழங்குடியினர்** என்று தற்போது கூறுவோம். கணக்குழு, குலம் என்பவை ஒரே குடும்ப அமைப்பு, வளர்ச்சி, கட்டுப்பாட்டிலிருந்து தோன்றியவை யாகும். கூத்து ஆடும்போது ஏனப்பா அவர்கள் பாடவில்லை என்று கேட்கிறாயா? அப்போது மொழியே பிறக்கவில்லை. பல்வேறு ஒலிகள் மூலமாகவே தமது கருத்துகளை மற்றவர் களுக்குத் தெரிவித்தனர். அழுகையும் சிரிப்பும் மொழிகள் தானே.

நீ குழந்தையாய் இருந்த போது உனக்கு ஒரு மொழி நன்கு தெரியும். அதுதான் 'குவாகுவா' என்று அழுவது. அது இன்றும் என் செவியில் இன்னிசையாக ஒலிக்கிறது. உனது 'குவாகுவா' மொழியை அம்மா புரிந்து கொள்வார். பசியா, பயமா, உடல் நலமில்லையா, முதுகில் ஏதாவது அண்டியுள்ளதா என்பதை அறிந்து ஆவன செய்வார். உன் அழுகை நீங்கும்.

அன்று சமுதாயம் ஆரம்ப நிலையில் இருந்தது. குழந்தையா யிருந்தபோது உன் தேவைகள் போலவே அவர் களது தேவைகளும் இருந்தன. உனக்குப் பால் தேவைப் பட்டது. உணவே அவர்களது முதல் பிரச்சனையுமாகும்.

அவர்களது கூட்டு வாழ்க்கையே மொழியையும் கற்றுக் கொடுத்தது. நீ சிறுமியாக எங்களிடம் மழலை பேசியது போலவே அவர்களும் பேசத் தொடங்கினர். நீ சின்னஞ் சிறு குழந்தையாய் இருந்த பொழுது பாலை 'பா' எனவும் தண்ணீரை 'ணீ' என்றும் சொல்லுவாய். நாங்கள் பேசுவதைக் கேட்டே சொல்லுவாய். பண்டைய மக்களும் இவ்வாறே ஒவ்வொரு பொருளுக்கும் வெவ்வேறான ஒலிகளை எழுப்பினர். அவர்களுக்குச் சொல்லித்தர எவரும் இருக்கவில்லை.

எழுத்துகளைக் கூட அவர்கள் அறியார். நீ ஆரம்பத்தில் எழுதப் பழகியது போலவே அவர்களும் குறியீடுகள் மூலமும் கருத்துகளைச் சிறிது சிறிதாக வெளிப்படுத்த ஆரம்பித்தனர். உனக்கு எழுத்துக்களைச் சொல்லித்தர நாங்கள் இருந்தோம். 5000 ஆண்டுகளுக்கு மேலாக வளர்ச்சியடைந்து வந்த குறியீடுகளையல்லவா நாங்கள் எழுதக் கற்றுத் தந்தோம்.

அன்புள்ள,
அப்பா

# 9. குடும்பத் தலைவி

*அன்பிற்கினிய மகளுக்கு,*

1975ஐப் பெண்கள் விடுதலை ஆண்டாக உலகு எங்கும் கொண்டாடினர். நீ பாடசாலையிலும் அறிந்திருப்பாய். பெண்கள் விடுதலை பற்றிக் கட்டுரை எழுதியிருப்பாய். ஆதியிலிருந்தே பெண்கள் ஆண்களுக்குக் கீழ்ப்பட்டே வாழ்ந் தார்களா என்று நீ தற்போது கேட்கலாம்.

பண்டையக் கூட்டுச் சமுதாயத்தில் பெண்ணே தலைவி யாக இருந்தாள்; ஆண் இல்லை. நாம் இன்று பெண்ணைக் குடும்பத் தலைவி என்றும் இல்லக் கிழத்தி என்றும் வாழ்க்கைத் துணைவி என்றும் கூறிய போதிலும் பெண் அடிமையாகவே இருக்கிறாள். ஆனால் அன்று, பெண்களும் ஆண்களும் குழந்தைகளும் முதியவர்களும் கொண்ட பண்டையச் சமுதாயத்தில், பெண்தான் சமுதாயத் தலைவி யாக இருந்தாள். இதைத் தாய் வழிச் சமுதாயம் என்பர். இச் செய்திகள் எல்லாம் உனக்கு வியப்பாக இருக்கிறதா?

இன்று அடிமையாய் இருக்கும் பெண்ணினம் அன்று எப்படி சமுதாயத் தலைமைப் பாத்திரம் ஏற்றது என்பதை அறிய உனக்கு ஆர்வம் இருப்பது இயற்கையே. அன்று தாய் மூலம் மட்டுமே இன்னாரின் மகள் இவள், இன்னாரின் மகன் இவன் என்று வம்ச வழி நிர்ணயிக்கப்பட்டது. மேலும் தாயே குழந்தைகளைப் பெற்று வளர்த்து பெரியவர் களாக்கும் சமூகப் பொறுப்பையும் பெற்றிருந்தாள். இந்த இரு காரணங்களும் பெண்ணை சமுதாயத் தலைவியாக்க அன்று காரணங்களாக இருந்தன.

மிருக நிலையிலிருந்து பரிணாம வளர்ச்சியடைந்த காலத்தில் பிள்ளைகள் தாயைத் தொடர்ந்து வாழ்வதே இயற்கை. தற்போதும் நீ வளர்த்த பூனையையே பார்,

குட்டிகளை வளர்ப்பது தாயின் பொறுப்பே. குரங்கு, கொரில்லா, சிம்பன்சிகளிலும் இவ்வாறே.

பண்டையக் கூட்டுச் சமுதாய மக்கள் காய் கனி கிழங்கு களைச் சேகரித்தும் சிறு விலங்குகள் பூச்சிகளை வேட்டை யாடியும் உயிர் வாழ்ந்தனர். பின்னர் தம் வாழ்க்கைக்கு வேட்டையாடுதலே பிரதான மாகிறபோது இடம் பெயர்ந்து செல்ல வேண்டியதாயிற்று. முதியவர்கள் வேட்டைக் கருவிகளைத் தயாரிக்கவும், இளைஞர் களும் யுவதிகளும் வேட்டையாடவும், குழந்தைகளும் சிறுவர்களும் காய் கனி கிழங்குகளைச் சேகரிக்கவும் முதிய பெண்கள்—தாய்களாக—கூட்டத்தை நிர்வகிக்கவும் படிப்படியாக, பால் வழியில் அமைந்த இயற்கையான வேலைப் பிரிவினை முதன் முதலில் தோன்றியது. இம் மாதிரியான வேலைப் பிரிவினைதான் மனிதனை அடிமைப் படுத்த அடித்தளமாகியது என்பதை நீயும் அறிந்து கொள்வது அவசியம்.

இத்தகைய வேலைப் பிரிவினை இன்று மேலும் வளர்ச்சி பெற்று நிலவுகிறது. அதனாலேயே பலவகை அடிமைத்தனம் மாறவில்லை பெண்கள் குழந்தை வளர்த்தல், சமைத்தல், வீட்டைப் பார்த்தல், துணிதுவைத்தல் போன்ற வேலைகளிலிருந்து விடுதலை பெறும்போதுதான் அவர்கள் அடிமைத் தளையிலிருந்து மீள முடியும். அமெரிக்கா உட்பட பல நாடுகளிலும் பெண்களின் தலையிலேயே இவ் வேலை கள் சுமத்தப்பட்டுள்ளன. அதனாலேயே பெண்கள் அங்கெல் லாம் விடுதலையடைய முடியவில்லை. சோசலிச நாடுகளில் மட்டுமே இவ்வேலைப் பிரிவினையிலிருந்து பெண்கள் விடுதலை பெற்று வருகிறார்கள். அது பற்றி விரிவாக உனக்குச் சொல்வேன்.

பெண்களே குடும்பத் தலைவராக வாழ்ந்த பண்டைச் சமுதாயத்தின் மிச்ச சொச்சங்கள் உலகின் பல பாகங்களில் இன்னும் நிலவுகின்றன. கண்டிச் சிங்களவர்களிடையே இன்னும் சில வழமைகள் உள்ளன. சொத்துகள் பெண்

களுக்கே உரியன. ஆண்கள் அவர்களோடு வாழும் வரை மட்டுமே சொத்தில் உரிமை கிடைக்கும். கணவர் விரும்பிய வேளை மனைவியைவிட்டுச் சென்று விடுகின்றனர். விவாகரத்து என்பது எளிமையாக உள்ளது. கணவன் பெயரின்றிப் பெண்கள் தமது பெயர்களையே எப்பொழுதும் எழுதுகின்றனர்.

தந்தை வழிச் சமுதாயம், தாய் வழிச் சமுதாயம் என இருவகை சமுதாய அமைப்புகள் உலகில் உள்ளன. இவை பற்றிய மேலும் பல உண்மைகளை நீ பின்னர் படித்துக் கொள்ளலாம். ஏங்கல்ஸ் என்பவர் எழுதிய 'குடும்பம், தனிச் சொத்து, அரசின் தோற்றம்,' என்ற நூல் வீட்டிலேயே உள்ளது. படிக்க முயல்க.

குரங்கு இனம் தாவர பட்சிணி. காய், கனி, கிழங்கு களையே உண்பது. அதிலிருந்து மனிதன் எப்படி மாறினான்? காய், கனி, கிழங்குகள் சில இடங்களில் கிடைக்காது போனதனாலேயே இறைச்சி, மீன் உண்ண ஆரம்பித்தான். தேவையே மனிதனை மாற்றியது.

கொரில்லா, சிம்பன்சி யெல்லாம் காடுகளில் வாழ வில்லை. பரந்த நிலப்பரப்பிலேயே வாழ்ந்தன. அதிக தூரம் நடந்து ஓடித்திரிய நேர்ந்ததாலேயே கால்கள் சரியாக அமைவு பெற்றன. முதுகு நிமிர்ந்தது. இவ்வாறாக அண்மைய மனித இன வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். மனித சமுதாயம் வளர்ந்தது. அதற்கு அஞ்சியே அவை காடுகளை நாடின.

ஆதி மனிதன் உடையே உடுத்தவில்லை. வெட்கம் என்பதையே அறியான். அலைந்து திரியும் காலத்தில் வெவ்வேறு சீதோஷ்ண நிலைகளைக் கண்டான். அவற்றி லிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள உடைகளைத் தேடினான். இலைதழை, மரவுரி, தோல் ஆகியவற்றை உடுத்தான். வெப்பத்திற்கு இலைதழை; குளிருக்குத் தோல் வாய்ப்பா யிருக்குமல்லவா? இன்று பணக்காரர் உடுப்பது

நாகரீகம்: அதற்காகவே உடையாகிவிட்டது. அதாவது காலுக்காகச் செருப்பு என்று இல்லாமல் செருப்புக்காகக் கால் என்று ஆகிவிட்டது.

"காலைத் தூக்கி நின்றாடுந் தெய்வமே" என்பதற்கு நீ அபிநயம் பிடிப்பாயல்லவா? நடனமாடும் சிவபிரான் புலித் தோல் அல்லவா இடையில் உடுத்திக் கொண்டிருக்கிறார். இதிலிருந்து இந்திய மனிதர்கள் தோல் உடை உடுத்திய காலத்தில் தோன்றிய கடவுள்தான் சிவன் என்பதை அறிந்து கொள்ளலாம். நீ ஆடும்போது புலித்தோல் போல நைலோன் துணியில் தைத்த சட்டையைப் போட்டுக் கொண்டல்லவா ஒற்றைக் காலில் நின்றாடுகிறாய்! சிவன் அக்காலத்தில் ஒரு குலத்தலைவனாக வாழ்ந்திருப்பார்; அவருக்கு எப்படித் தெரியும், எதிர்காலத்தில் இரசாயன முறையில் புலித்தோலைப் போல மென்மையான துணியைச் செய்து விடுவார்கள் என்று! சிவன் பாவம். புலித்தோல் எத்தனை கரடுமுரடாக இருந்திருக்கும்!

அன்புள்ள,
அப்பா

# 10. குலத் தலைவனும் தெய்வமும்

அன்பு மகளுக்கு,

பழங்குடியினரிடம் குடிசனப் பெருக்கம் குறைவாகவே இருந்தது என்பதை முன்னரே படித்திருப்பாய். அதற்கு வேறொரு காரணமும் இருந்தது. அதுவே போர்; விசித்திர மான போர்.

பழங்குடி மக்கள் ஆங்காங்கே நிரந்தரமாக வாழமுடிய வில்லை. வரட்சி, வெள்ளம், காட்டுத்தீ, பூமிநடுக்கம், தாம் வாழும் காடுகளில் வேட்டை விலங்குகள் இன்றிப்போதல், வளர்ப்பு மிருகங்களுக்கான புல்நிலத் தேவைகள் ஆகியன அவர்களை நிலை பெயரச் செய்தன. அவ்வேளை வேறு இடத்தில் வாழ்ந்த மற்றோர் பழங்குடியினரோடு மோத நேரிட்டது.

ஆரம்ப கால வாழ்நிலை; உணவு, உயிர்வாழ்தலே முதன்மை பெற்ற நிலை. வேட்டைக் காடுகளையும் மேய்ச்சல் காடுகளையும் ஒரு குலத்தினர் மற்றக் குலத்தினருக்கு விட்டுக் கொடுக்க முடியாத பற்றாக் குறை நிலை. தம் தேவைக்கு மேலதிகமான உணவே கிடையாது. மோதல், போர் தவிர்க்க முடியாததாகும்: அவர்களிடமுள்ள கருவி களின் வளர்ச்சியும், ஆட்பலமும் போரின் வெற்றியைத் தீர்மானிக்கும்.

வெற்றி பெற்ற குலத்தவர் மற்றைய குலத்தவரை அடியோடு அழித்துவிடுவர். குழந்தைகள், பெண்கள் என எவரையுமே விட்டுவைப்பதில்லை. தப்பி ஓடியவர் தான் அக்குலத்தில் எஞ்சியவராவர்.

இரக்கமே யில்லையா, ஏனப்பா எல்லோரையும் கொன்று விடுகின்றனர் என்று கேட்கிறாயா? எவரையாவது

சிறையெடுப்பின் அவர்களுக்கும் உணவு போடவேண்டு மல்லவா? தம்குலத்தவருக்கே நிரந்தரமாகப் போதியஉணவு கிடைக்காதிருக்கும்போது, சிறைப் பிடிக்கப்பட்ட அந்நிய குலத்தவரை எப்படிக் காப்பாற்ற முடியும். தம் தேவைகளை பூர்த்தி செய்யும் அளவிற்கோ அல்லது தம் தேவைக்கு மேலதிகமான உபரியைச் சேமிக்கும் அளவிற்கோ உற்பத்திக் கருவிகளை இன்னும் அவர்கள் கண்டு பிடிக்க வில்லை.

ஆகவே—அவ்வேளை—அச்சமூக அமைப்பில் வென்றவர் தோற்கும் பிற குலத்தவரைக் கொல்வது நீதியாக இருந்தது. வாழ்க்கை முறையே நீதி, நேர்மை போன்றவற்றையும் தீர்மானிக்கிறது.

தொல் குலங்களுக்கெல்லாம் தலைவர்கள் இருந்தனர். குலத்தில் ஒழுங்கு, கட்டுப்பாடு, நீதி, சடங்குமுறை, வேலைப் பிரிவினை ஆகியவற்றையெல்லாம் தலைவரே கவனிப்பார். வேட்டையாடுதல், போர் ஆகியவற்றிற்கும் குலத்தலைவரே தலைமை தாங்குவார். அவர் எப்பொழுதும் ஒரு வீர புருஷனாகவே விளங்குவார். அவர் இறக்க நேரினும் அவரது வீர தீரச் செயல்களை அக்குலத்தவர்கள் மறப்பதில்லை. அவற்றைப் பாராட்டி அவரை வழிபட்டும் வந்தனர். இது வீர வழிபாட்டு வழமையாகும். இன்று வழிபடும் பல தெய்வங்கள் இத்தகைய வழிபாட்டு முறை யிலேயே வளர்ந்து வந்துள்ளன. இங்கென்ன, உலகெங்கும் இவ்வாறே நடைபெற்றது. குமரன்கூட. உன் தம்பி குமரனல்ல. சிவன் மைந்தன் செல்வக் குமரன். வேலன்—ஒரு குலத்தலைவனாகவே வாழ்ந்திருப்பான். அவன் குறிஞ்சி வீரன். மலைநாட்டுக் குலங்களின் தலைவன். குன்றுகளில் வாழ்ந்தவனாகவே இன்றும் கொள்ளப்படுகிறான். வேலின் அமைப்பைப் பார்த்தாயா? அது அக்காலத்தில் வளர்ச்சி யடைந்த ஆயுதம், உற்பத்திக்கருவி. குமரனை மறந்து இன்று வேல், சூலம் போன்ற ஆயுதங்களையே வணங்குவதைப் பார்த்தாயா?

குமரன் வேலோடு இருந்தான் என்பது பழங்குடியினர் உற்பத்திக் கருவிகளுக்கு எத்தனை மதிப்புவழங்கினர் என்பதையே காட்டுகிறது. உணவும் தற்காப்பும் கருவி யிலேயே தங்கியிருந்தது. நவராத்திரி விழாவின் இறுதிநாள் ஆயுதபூசை என்று கொண்டாடு கிறார்களல்லவா? சிறு கருவிகளென்ன, இன்று நம் நாட்டில் யந்திரங்களுக்கே பூசை செய்கிறார்கள், குல வழக்குகள் இன்னும் ஒழியவில்லை.

ஒவ்வொரு பழங்குடியினரிடத்திலும் ஒழுக்கங்கள், பழக்க வழக்கங்கள், நீதிமுறைகள், சடங்கு முறைகள் பெரும் பாலும் வேறுபட்டிருக்கும். இவ்வேறுபாடுகள் கூட அவரவர் கள் பயன்படுத்திய உற்பத்திக் கருவிகளையும் உற்பத்தி உறவுகளையும் சார்ந்தவையாகவே இருக்கும். உற்பத்தி உறவுபற்றிப் பின்னர் விரிவாக அறிவாய்.

நீ குறத்தி நடனமாடுவாயே; எல்லோரும் பாராட்டு வார்களே, உன் வேடத்தையும் நடனத்தையும் பார்த்து. குறவர்களும் பண்டைக் காலத்தில் வாழ்ந்த ஒரு பழங் குடியினரே. இந்தியாவில் இன்னும் இவர்கள் வாழ்கின்றனர். நீ சினிமாவில் மட்டுமே பார்த்திருப்பாய். இவர்களது நடை, உடை, பேச்சுக்கள், அணியும் ஆபரணங்கள் எல்லாமே தனிமையாக இருக்கும். இன்று இவர்களை ஆங்காங்கே குழு குழுவாக நாடெங்கும் பார்க்கலாம்.

எங்கள் கிராமத்தில் பல சாதியினர் இருப்பதைப் பார்த்து வியப்பாக கேட்பாயே. இவர்கூட பழங்குடியினரின் அடியில் வளர்ந்து வந்தவர்களேயாவர். நாம் கூடத்தான்.

அன்பான,
அப்பா

# 11. வர்க்கச் சமுதாயம் என்றால் என்ன?

அன்பு மகளே,

மனிதனுடைய தனிச் சிறப்புகள் பற்றிப் பின்னரும் எழுதினேன். உற்பத்திக் கருவிகளை அவன் மேலும் மேலும் சிறப்பாக்குகிறான்; கூர்மை அடையச் செய்கிறான். அதோடு அவனது சிந்தனையும் வளர்ச்சி அடைகிறது. இயற்கையை நுணுகி ஆராய்கிறான். பலவற்றைக் கற்றுக் கொள்கிறான். இயற்கையை வெல்ல முடியும் என்ற நம்பிக்கை மனிதனுக்கு ஏற்படுகிறது.

இவை ஒரு நீண்ட கால வளர்ச்சியின் தொடராகும். மிருகங்கள் இயற்கையோடு ஒட்டியே வாழ்ந்தன; இயற்கையில் கிடைப்பவற்றையே உண்டு வாழ்ந்து வந்தன. மனிதன் இதற்கு விலக்காகிறான். எப்படித் தெரியுமா? அவன் உற்பத்திக் கருவிகளை இயற்கை மீது செலுத்துகிறான். கற்கோடாரியால் மரத்தை வெட்டுகிறான். அம்பு வில்லால் ஒரு மிருகத்தை வீழ்த்துகிறான். செம்பு உலோகத்தால் செய்த வாளால் இறைச்சி வெட்டுகிறான். கற்களை உராய்த்துத் தீ மூட்டுகிறான்: இரும்புக் கலப்பையால் நிலத்தைக் கீறி உழுகிறான். தானியத்தை விதைக்கிறான்.

மனிதன், உற்பத்திக் கருவிகள், இயற்கை; இம் மூன்றையும் தனித்தனியே கவனிக்க. இன்று நாம் காணும் வளர்ச்சி அனைத்துமே மனிதன் உற்பத்திக் கருவிகளை வளர்த்து இயற்கை மீது செலுத்தியதால் ஏற்பட்ட வளர்ச்சி என்பதை மறந்து விடாதே. எப்பொருளும் வானத்திலிருந்து வந்து விடவில்லை. கட்டிடங்கள், கார்கள், விமானம், ரேடியோ, டிவி, கம்பியூட்டர், உடை, உணவு, யந்திரங்கள்...எல்லாமே மனிதர் உழைப்புக் கருவிகளை இயக்கி தம் உழைப்புச் சக்திகளைச் செலுத்தப் பிறந்தவைகள் தான்.

மனிதனிடம் உள்ளது மகத்தான உழைப்புச் சக்தியாகும். நிலம், நீர், மூலப்பொருட்களை உற்பத்திச் சாதனங்கள் அல்லது இலக்குப் பொருட்கள் என்பர். உழைப்புக் கருவிகள் என்பனபற்றி மேலே சொல்லி உள்ளேனே. ஆகவே மேலே கூறியதை இன்னும் சிறப்பாகப் பின்வருமாறு கூறலாம்:- மனிதர் இயற்கையின் மீது தம் உழைப்புச் சக்தியைச் செலுத்தியே தமக்குத் தேவைப்பட்ட உற்பத்திக் கருவிகளையும் ஆக்கிக் கொள்கிறார்கள். பின்னர் தம் தேவைக்கு ஏற்ப அக்கருவிகளை மென்மேலும் மாற்றியமைத்துக் கொள்கின்றனர்.

உற்பத்திக் கருவிகள் வளர்ச்சியடைந்தன; பழங்குடியினர் நிலை பெறத் தொடங்கினர். தம் தேவைக்கு மேலாக உற்பத்தி செய்ய ஆரம்பித்தனர். இதையே உபரி உற்பத்தி என முன்னரும் எழுதினேன். அப்போது தான் மனிதனுடைய வேகமான வளர்ச்சி ஆரம்பமாகத் தொடங்கியது. அதே வேளையில் மனித சமுதாய உறவுகளிலும் பெரிய மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின.

போரில் வெற்றி பெற்றவர்கள் தோற்ற பழங்குடியினரை கொன்று ஒழிப்பதை நிறுத்தினர் அவர்களைத் தமக்கு அடிமை ஆக்கிக் கொண்டனர். தாம் செய்த வேலைகளை அவர்களைக் கொண்டு செய்வித்தனர். மேலும் சிறப்பாகச் சொல்லின், தாம் உழைக்காது தம்மிடமுள்ள உற்பத்திக் கருவிகளை அடிமைகளிடம் கொடுத்து உழைக்கச் செய்தனர்.

அவ்வடிமைகளுக்கு உணவு, உறைவிடம் மட்டும் அளித்தனர். ஏன் தெரியுமா? அடிமைகள் தாம் இழந்த உழைப்புச் சக்தியை மீண்டும் பெற்று புதிய தெம்போடு ஆண்டைகளுக்கு நாளைக்கும் உழைக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

அடிமைகள் தாம் உண்ட உணவிற்கும் மேலாக உபரியாக—உற்பத்தி செய்தார்கள். அவர்கள் உழைப்பால்

கிடைத்த மேலதிக உற்பத்தியை,—உபரி உழைப்பை— உற்பத்திக் கருவிகளை வைத்திருந்த ஆண்டைகள் அபகரித்தனர். அடிமைகளும் நிலபுலங்கள் போல ஆண்டைகளின் உடைமைப் பொருளாயினர்; ஆடுமாடுகளைப் போல விற்பனைப் பண்டமாயினர்!

இங்குச் சுதந்திரமாக வாழ்ந்து வந்த மனிதர்களிடையே நிலவும் உறவுகளைப் பார்த்தாயா? ஒருபிரிவினர்:— ஆண்டைகள்—உற்பத்திக் கருவிகளையும், உற்பத்திச் சாதனங்களையும் கொண்டிருக்கின்றனர். மற்றொரு பிரிவினர் அடிமைகள். ஒரு உடைமையுமின்றி ஆண்டைகளுக்கு தமது உழைப்புச் சக்தியை மட்டும் நாள் தோறும் செலவு செய்து வாழ்ந்து வருகின்றனர். உற்பத்திச் சாதனங்களை வைத்திருந்த இந்த ஆண்டைகள் உடைமையாளர்களாக இருக்கவும் உற்பத்திச் சக்தியை வைத்திருந்த அடிமைகள் உரிமையும் உடைமையு மற்றவர்களா யிருந்ததையும் பார்க்கிறாயல்லவா? இவ்விரு தரப்பட்டவர்களிடம் நிலவும் உறவு போன்றவற்றைத்தான் உற்பத்தி உறவு என்கிறோம்.

மனித வரலாற்றில் இங்கு தான் வர்க்கச் சமுதாயம் தோன்றிவிட்டதாக மார்க்ஸ் கூறினார். ஒரு பகுதியினர் உழைப்பை மற்றொரு பகுதியினர் பறித்தெடுக்கும் அநாகரிக முறை; இது நீதியாக்கப்பட்டது. உலகின் பல பகுதிகளில் சென்ற 4000 ஆண்டுகளாக இத்தகைய முறை தொடர்ந்து நீடித்து வருகிறது காலப்போக்கில் உற்பத்தி உறவுகளிடை பண்ணை அடிமை, கூலி அடிமை என சிறுசிறு மாற்றம் ஏற்பட்டுவந்துள்ளது. அவ்வளவேதான்.

இத்தகைய அமைப்பை அழிப்பதுவே அப்பாவின் கோட்பாடாகும். இது தவறான கொள்கையா? அதையே சோசலிசம் என்று கூறுவோம். இது மனித சமுதாய வளர்ச்சிக்காகச் செய்யும் பெரிய சேவையாக உனக்குத் தோன்ற வில்லையா?

அன்புள்ள,
அப்பா

# 12. அடிமைச் சமுதாயம்

அன்பு நிறைந்த மகளுக்கு,

ஆடு, மாடுகளை விற்கும் சந்தையை நீ பார்த்துள்ளாயா? இந்தியாவில் பல சந்தைகள் ஆங்காங்கே வாரந்தோறும் கூடும். தரகர் நின்று விற்பர். ஏலத்தில் கூட விற்பனை நடைபெறும். உங்களுக்குத் தேவையான ஆடு மாடுகளை வாங்கிச் செல்லலாம். அவற்றை எதுவும் செய்யலாம். மாடுகளை அவரவர் தமது உடைமை, சொத்து என்பதைக் காட்டுவதற்காகக் குறிபோடுவர். நீ பார்த்திருக்க மாட்டாய். என் பெரியப்பா ஆறுமுகம். அவர் தமது மாடுகளுக்கு 'ஆ' என்ற முதல் எழுத்தைக் குறியாகப் போடுவார். நான் பார்த்திருக்கிறேன். 'ஆ' என்று சினிமா போஸ்டரில் வருவது போன்ற பெரிய அளவு எழுத்தில் ஒரு இரும்புக் கம்பி இருக்கும். அதை சிரட்டைக் கரி எரியும் நெருப்பிலே பழுக்கக் காய்ச்சுவர். மாட்டைப் படுக்க வைத்து உலக்கையாலும், கயிற்றாலும் அழுத்திப் பிடிப்பர். தீ நிறமான கம்பியை மாட்டின் முதுகில் அழுத்தி விடுவர். நீ சகிக்கமாட்டாய். கண்ணை மூடி 'ஐயோ' என்று சத்தமிடுவாய். முதுகிலே 'ஆ' எழுத்து, புண் ஆகி அழியாத வடுவாகிவிடும்.

இதே போலவே அடிமைகளுக்கும் செய்தனர். ஆடு மாடுகளை நாலுகால் சொத்து என்பது போல அடிமைகளை இரண்டுகால் சொத்து என்றனர். வாங்கி விற்றனர். ஆடு மாடுகளை இன்றும் இந்தியாவில் சீதனமாக வழங்குவதுண்டு. அதேபோல அன்று அடிமைகளும் பரம்பரைச் சொத்தாகச் சென்றன. அடிமையின் பிள்ளைகளும் எசமானின் சொத்தே. அடிமைகளைப் பெருக்கினர். ஒருவரின் செல்வமும் மதிப்பும் அவரிடமிருந்த அடிமைகளின் எண்ணிக்கையிலேயே இருந்தன.

அடிமைகள் தப்பி ஓடிவிடமாட்டார்களா என்று நீ கேட்கலாம். அந்தந்த நாட்டின் அமைப்பை ஒட்டி, அடிமைகள் தப்பிவிடாதிருக்க, பல்வேறு வகையான முறைகளை எசமானர்கள் கையாண்டனர். வழமைகள், சட்டங்களும் ஆக்கப்பட்டன. தப்பி ஓடினும் குறியை வைத்தே தேடிப்பிடித்து உரிமை பெறுவர். ஒருவர் மாட்டை மற்றவர் அபகரிப்பதில்லை. அதுபோலவே அடிமைகளையும் பிடித்து உரியவரிடம் சேர்ப்பர். ஆண்டைக்கு அடிமையை விரும்பியவாறு தண்டிக்க உரிமை உண்டு. கொடுமையான தண்டனைகள். அடிமைகளை வாங்கிவிற்கும் உரிமைபோல கொன்று விடவும் எசமானுக்கு உரிமை இருந்தது. அடிமையின் உழைப்பு மட்டுமல்ல. உடலும் மிருகங்கள் போல எசமானுடைய சொத்தே.

பண்டைய அடிமைச் சமுதாய வரலாற்றில் உரோமாபுரி அடிமைகள் பற்றிய போதிய வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன. அங்கு அடிமைகளைச் சங்கிலியால் பிணைத்து வைத்திருந்தனர். வேலை செய்யும்போது மட்டும் விலங்கை எடுத்து விடுவர். ஆடு மாடுகளை மேய்ப்பது போல ஒருவன் குதிரையில் சவுக்குடன் நின்று வேலை வாங்குவான். வேலை செய்யும்போது அடிமை சிறு தவறுசெய்தாலும் சவுக்கடி விழும்.

அடிமைகள் என்றதும் நீகிரோக்களாக இருப்பர்; கறுப்பாயிருப்பர் என நீ எண்ணலாம். அப்படியல்ல; வெள்ளை நிறத்தவர்களுக்குள்ளேயே எசமானர், அடிமைகள் என்று இரு வர்க்கமாகப் பிரிந்திருந்தனர். எம்மவரிடையே சாதிப் பிரிவு இருக்கிறதல்லவா? அதுபோலவேதான். அங்கு நிறபேதம் இருந்தது. சாதிப் பிரிவினைகூட அடிமை அமைப்பு முறையின் புதிய வடிவமே ஆகும். இவையெல்லாம் ஒருவர் உழைப்பை மற்றவர் வாய்ப்பாக அபகரிப்பதற்கு ஏற்பட்ட பிரிவினைகளே. மனிதரால் இடைக்காலத்தில் ஏற்படுத்தப்பட்டவையே.

சவுக்கடி, கடுமையான் உழைப்பு, விலங்கு; இவற்றை அடிமைகள் சகித்துக்கொண்டு இருந்தனரா? சில வருடங்களின் முன்னர் ஒருநாள் சங்கிலியால் பிணைத்து வைத்திருந்த குரங்கை நீ வேடிக்கை பார்த்தது நினைவில் வருகிறதா? அது கட்டை அறுத்து உன்னைத் துரத்திப் பிராண்டியதை மறந்திருக்கமாட்டாய். நீ கீறிய காயங்களுடன் அழுதுகொண்டு வீட்டுக்கு வந்தாய்.

குரங்கே அடிமைத்தனத்தை எதிர்க்கிறது. கூட்டில் அடைபட்டிருக்கும் பறவைகள் வெளியேறத் துடிக்கின்றன. கட்டிவைக்கப்பட்டிருக்கும் மிருகங்களெல்லாம் தண்டிக்கப்பட்டபோதும் எசமானை எதிர்க்கின்றன. விலங்கினும் மேலான மனிதன் மட்டும் அடிமையாய் இருப்பானா!

மனிதன் புறநிலை உணர்வுகளைத் தொகுத்துச் சிந்தனையை வளர்க்கக்கூடியவன். அடிமைப்பட்ட மனிதன் தன்னுடைய உழைப்பாலேயே, எசமான் உழைக்காது, வசதியாக வாழ்வதைப் பார்க்கிறான். அவன் 'நான் எதற்காக அதிகமாக, இன்னல்பட்டு உழைக்கவேண்டும்? நானும் விடுதலை பெறவேண்டும்' எனச் சிந்திக்கத் தொடங்குகிறான். இத்தகைய சிந்தனையை, தோற்றுவித்தது உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியாகும்.

தனித்தனி எசமானர்களையெல்லாம் ஆங்காங்கே அடிமைகள் எதிர்த்தனர். எசமானர்கள் ஒன்றுதிரண்டு புதிய அமைப்பு ஒன்றிற்கு வழிவகுத்தனர். அதுவே அரசு என்பதாகும்.

ஐரோப்பாவில் ஆண்டான்களும் அடிமைகளும் கொண்ட அடிமை முறை இருந்தது என்று கூறுவதெல்லாம் சரியப்பா? நம் நாட்டில் இருந்ததா என்று நீ கேட்கலாம். நம் நாட்டிலும் இருந்திருக்கிறது. ஆனால் அதன் அடையாளங்கள் மங்கலாக மட்டுமே தெரிகின்றன.

அன்புள்ள,
அப்பா

# 13. அரசின் தோற்றம்

இனிய மகளுக்கு,

இந்தியாவில் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்ட பொழுதும் அதன் பின்னரும் கொத்தடிமைகள் விடுவிக்கப் பட்டதாகச் செய்திகளை நீ தாள்களில் பார்த்திருப்பாய். இது எதைக் காட்டுகிறது. பண்டைய அடிமை முறையின் மிச்ச சொச்சங்களைத் தானே.

உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சி உபரி உற்பத்திக்கு வழி வகுத்தது; அடிப்படைத் தேவையான உணவுப் பிரச்சனையை மனிதனால் தீர்க்கமுடிந்தது. பட்டினிச்சாவு குறைந்தது. மேலும் காட்டு மிருகங்கள், இயற்கையின் கோரங்களிலிருந்தும் தற்காப்பிற்கு மனிதன் வழி தேடிக் கொண்டான். குலங்கள் வளர்ச்சியடைந்தன.

ஆயினும் குலங்களிடையே ஏற்பட்ட மோதல்கள், வேலைப் பிரிவினைகள் சமுதாயத்தை வர்க்கமாகப் பிரித்தன. உற்பத்திக்கருவிகள், நிலம், நீர் போன்ற உற்பத்திச் சாதனங்களைக் கொண்டிருந்தோர் ஒருபுறம். அவை ஏதுமற்று உழைப்பு ஒன்று மட்டுமே கொண்டிருந்த உழைப்பாளிகள் மற்றொருபுறம்.

சொத்துக்கள் இருவகைப்படும். அசையாச் சொத்து, அசையும் சொத்து. நிலம், நீர், மரங்கள் போன்றவை அசையாச் சொத்து. ஆடு மாடுகள், மூலப்பொருட்கள், பண்டங்கள், உலோகங்கள் (தங்கம், வெள்ளி உட்பட) யாவும் அசையும் சொத்து. அடிமைகளும் அசையும் சொத்தாகவே கருதப்பட்டனர்.

எவ்வித சொத்து உரிமையுமற்று, நாள்பூராவும் உழைக்கும் அடிமைகள் தம் எசமானர்களை எதிர்க்கத்

தொடங்கினர் என்பதை முன்னரே எழுதியிருக்கிறேன். சொத்துள்ள அனைவரும் தமது சொத்துகளையும் நலனையும் காக்க அரசு என்ற அமைப்பை ஏற்படுத்தினர். சொத்துள்ளோர் தாம் பறித்துக் குவித்த உபரியில் ஒரு பங்கை அரசுக்கு வழங்கினர்.

பெருந்தொகையான சொத்துகளையும் அடிமைகளையும் உற்பத்திக் கருவிகளையும் கொண்டவனே அரசன் ஆனான். காலப்போக்கில் அவன் உற்பத்தியில் நேரடியாக ஈடுபடுவதைக் குறைத்துக் கொண்டான். தன் ஆதிக்கத்திலுள்ளவற்றைப் பிறருக்குக் குத்தகைக்கு வழங்கி பங்கு பெற்றான். தான் திரட்டிய சொத்துக்களைப் பாதுகாப்பதற்கேற்ற அமைப்பையும் கருவிகளையும் ஆக்கிக் கொள்வதில் ஈடுபட்டான்.

மன்னன் ஆற்றிய வேலைகளை நான்காகப் பிரிக்கலாம் (1) உடைமையாளர்களின் சொத்துகளைப் பாதுகாக்கவும் பெருக்கவும் சட்டங்களை வகுத்தான். சொத்துகளை விற்பது, பங்கிடுவது, பரம்பரையாகப் பேணுவது யாவும் இவற்றில் அடங்கும். 2. சட்டம், ஒழுங்குகளை பாதுகாக்கவும் செயல்படுத்தவும் படைகளை ஏற்படுத்தினான். 3. நீதி வழங்க நீதி மன்றத்தையும் 4. அந்த நீதியை அமுல்படுத்த சிறைச்சாலைகளையும் ஏற்படுத்தினான்.

சொத்துள்ளவரின் தேவைக்காக அவர்களால் ஏற்படுத்தப்பட்டதே அரசாகும். ஆகவே இந்த அமைப்பை எதிர்க்கும் வர்க்கத்தவர் தண்டிக்கப்பட்டனர். அடக்கி ஒடுக்கப்பட்டனர். இதற்காக அரசன் சிறைச்சாலைகள். ஆயுதங்கள், படைகளையே பேணிக் காத்தான்.

ஆகவே அரசு என்பது பாலத்காரம் கொண்ட ஒரு வன்முறை அமைப்பாகும். அடிமைகள் கொடுமை தாங்காது தம் உரிமைக்காகக் கொதித்தெழுந்த போதெல்லாம் ஈவிரக்கமின்றி அடக்கி ஒடுக்கப்பட்டனர். ஸ்பாட்டக்கஸ் கதை உனக்குத் தெரியுந்தானே!

பல மன்னர்களின் கதைகளை சரித்திரப் பாடத்தின் போது நீ கற்றிருப்பாய். அவர்களது வீரதீரச் செயல்களையே ஆசிரியர் சொல்லித் தந்திருப்பார். வேறும் பல கதைகளையும் கேட்டிருப்பாய். சினிமாவிலும் அரசர்களது வாழ்க்கை, போர்கள் பற்றிப் பார்த்திருப்பாய்.

அக்காலத்தில் மன்னர்களைப் புகழ்ந்தே பாடல், கதை எழுதினர்; காவியம் படைத்தனர்; புலவர்கள் பாராட்டிப் பரிசில் பெற்றனர். மன்னர்களை மக்கள் எதிர்த்த சம்பவங்களை அப்புலவர்கள் பாடமாட்டார்கள். பாடினால் மன்னன் அவர்களுக்குத் தரும் பரிசு சிறையல்லவா? இன்றும் இதேநிலைதான். அரசனுக்குப் பதிலாக அரசு இன்று வேறு வடிவம் பெற்றுள்ளது.

நீ சிறுமியாயிருக்கும்போது ராசா, ராணிக் கதைகளே படிப்பாய். என்னைக் கதை சொல்லும்படிக் கேட்பாய். உனக்கு முன்பு சொன்ன ஒரு கதை நினைவில் வருகிறது.

ஒரு அரசன் ஒவ்வொரு விவசாயியிடமும் வரி பெற்றான். அதற்கு மேலாக ஒவ்வொரு மூட்டை நெல்லைக் கொடுத்து அதற்குப் பதிலாக ஒவ்வொரு மூட்டை அரிசியும் பெற்றானாம். மக்கள் அவனைக் கொடுங்கோலன் என்று வைதனர். அவன் சாகும்வேளை தன் மகனை அழைத்தான். 'நீயே இனி அரசன். நான் இறந்ததும் மக்கள் என்னை வையாது என் பெயரைக் காப்பாற்று' என்றானாம். மகன் மன்னனானதும் விவசாயிகளிடம் ஒரு மூட்டை உமியைக் கொடுத்து ஒரு மூட்டை அரிசி கேட்டானாம். விவசாயிகள் முன்னைய அரசனைப் பாராட்டி விட்டு மகனைக் கொடியவன் என்றனர். மன்னர்களுடைய எதேச்சாதிகாரம் எவ்வாறு இருந்தது என்பதற்காகவே இக்கதையைக் கூறினேன்.

அன்புடன்,
அப்பா

# 14. அடிமைகள் அடைந்த கொடுமைகள்

அன்பு மகளுக்கு,

மனித சமுதாய அமைப்புகளில் மிகவும் கொடுமையான அமைப்பு, அடிமை உடைமை சமுதாய அமைப்பே ஆகும். பண்டைய காலம் 'பொற்காலம்' என்று கூறுவதெல்லாம் பெரும் பொய்; ஏமாற்று. இதுவரை படித்தவற்றிலிருந்து நீயே உணர்ந்திருப்பாய்; உணரத் தவறியிருப்பினும் விரைவில் அறிந்துகொள்வாய்.

கிராமத்தில் சேவல் கோழிகளை வளர்த்துச் சண்டைக்கு விடுவதை நீ பார்த்திருக்கிறாயா? ஒரு சேவல் மற்றச் சேவலைக் கொத்தி விழுத்தும் வரை சுற்றி நின்று யாவரும் வேடிக்கை பார்ப்பர். வெல்லும் சேவலுக்காகப் பந்தயமும் கட்டுவர். இதுகூட பரவாயில்லை. ஏனெனில் போரிடும் சேவல்கள் காயப்படலாம்; மரிப்பதில்லை.

உரோமாபுரியில் ஒரு அடிமை மற்றோர் அடிமையுடனே போரிடப் பயிற்சி அளித்தனர். உங்கள் பாடசாலையிலுள்ள விளையாட்டரங்கம் போல சுற்றி வர உட்கார்ந்து விளையாட்டுப் பார்க்கும் அரங்கம் அன்றும் அமைத்திருந் தார்கள். இதற்கு 'அரினா' என்று பெயர். உரோமாபுரியில் இன்றும் 'அரினா' வைப் பார்க்கலாம்.

அடிமைகளுக்கு வாள், ஈட்டி போன்ற ஆயுதங்களுடன் போரிட பயிற்சி அளிப்பர். 'அரினா'விற்கு உரோமாபுரி சீமான்களும் சீமாட்டிகளும் மாலை வேளைகளில் பொழுது போக்க வருவர். அங்கு அடிமைகள் ஆயுதம் எடுத்துப் போராடுவர்.

நீ சினிமாவிலோ நாடகத்திலோ பார்க்கும் போலிப் போராட்டமல்ல இது. இப்போலியைப் பார்த்தே பொறுக்க முடியாது கண்களை மூடுவாய். அல்லது ஒருவர் காயமுற்று விழுந்ததும் 'பாவம்' என்று அழுவாயே.

'அரினா'வில் அடிமைகள் போரிட்டு உண்மையாகவே ஒருவரை ஒருவர் வெட்டி வீழ்த்துவர். ஓர் அடிமை மற்றவனை அரினாவிலேயே கொல்ல வேண்டும். கொல்லும் வரை போரிட வேண்டும். இரத்தம் பீறிட்டுப் பெருகும். அப்போது சீமான்களும் சீமாட்டிகளும் கைதட்டி ஆரவாரம் செய்வர்.

இருவரும் அடிமைகளாக இருந்த போதும் அவரவர் தமது உயிரைக் காப்பாற்ற உக்கிரமாகப் போரிடுவர். ஒரே வேளையில் ஜோடி ஜோடியாகப் பலரைப் போரிடவிடுவதும் உண்டு. இதற்குத் தனி விளம்பரம். பிரவேசக் கட்டணமும் அதிகமாகும்.

இது மட்டுமல்ல. சிங்கம், புலி போன்ற கொடிய மிருகங்களுடனும் அடிமைகளைப் போரிட விடுவர். மிருகங்களைப் பல நாள் பட்டினி போட்டுவிட்டுக் கூட்டிலிருந்து திறந்து விடுவர். சிங்கம் அடிமையின் உடலைக் கீறிக் கிழித்து உண்பதைப் பார்த்துக் கைதட்டி ஆரவாரம் செய்வர். சிரித்து மகிழ்வர்.

இவையே மிகப் பெரிய பொழுது போக்குகளாகக் கருதப் பட்டன. இப் பொழுதுபோக்கைப் பல சீமான்கள் லாபகர மான தொழிலாகவே நடத்தினர். நல்ல உடற்கட்டான வாலிபர்களைத் தேர்ந்து பயிற்சி அளித்து அரினாக்களில் போரிடச் செய்தனர். அடிமைகள் தொடர்ந்து கொல்லப் பட்டனர். புதிய அடிமைகள் பயிற்றப்பட்டனர்.

இச் சமூகத்தையே நாகரிக சமுதாயம் என்று அன்று பாராட்டினர்! இப்படிப்பட்ட வாழ்க்கையைக் கொண்ட காலத்தை 'பொற்காலம்' என்று கூறமுடியுமா!

உரோமாபுரியில் 'அரினா'வில் போரிடுவதற்காகப் பயிற்றப் பட்டவர்களில் ஸ்பாட்டகஸ் என்ற பெயருடன் ஓர் அடிமை இருந்தான். எசமான்களான சீமான்கள் அடிமை கட்குச் செய்யும் கொடுமைகளைக் கண்டு கொதிப்படைந் தான். உணர்வுமிக்க மற்றைய அடிமைகளையும் ஒன்று திரட்டினான்.

ஆயுதம் ஏந்தி எசமான்களுக்கு எதிராக அடிமைகள் கிளர்ந்து எழுந்தனர். போரிட்டு எசமான்களைக் கொன்றனர். உரோமாபுரி அரசு, படைகளை அனுப்பி அடக்க முயன்றது. முடியவில்லை.

உரோம அரசே ஆட்டங் கண்டது. சீமான்கள் எல்லோரும் அஞ்சி நடுங்கினர். மற்றொரு பெரிய படை திரட்டப்பட்டது. முன்னேறிய ஆயுதங்களுடன் அடிமை களுடன் போர் நடந்தது. அரசின் படை வெற்றி பெற்றது.

உரோமாபுரிப் படை போரிட்ட அடிமைகளை யெல்லாம் கொன்று குவித்தது. கைப்பற்றிய பிற அடிமை களைத் தெருக்களிலெல்லாம், சிலுவை நட்டு, ஆணி அறைந்து தொங்க விட்டனர். யேசு நாதரை சிலுவையில் அறைந்த உருவங்களை உங்கள் பாடசாலையில் பார்த்திருப் பாயல்லவா? அதே போலவே அடிமைகள் தெருக்களில் சிலுவையில் தொங்கினர்.

யேசுநாதர் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். ஆனால் சிலுவையில் அறையப்பட்ட இந்த அடிமைகள் உடனே விழித்தெழ வில்லை என்பது உண்மையே. ஆனால் அவர்களது பரம்பரையினர் இன்று உலகெங்கும் விழித் தெழுந்து விட்டனர். அதனாலேயே இன்றைய உலகம் புதிய உலகமாக மாற்றப்பட்டு வருகிறது.

அன்புள்ள,
அப்பா

# 15. நிலவுடைமைச் சமுதாயம் என்றால் என்ன?

அன்புள்ள மகளுக்கு,

அடிமைகள், பண்டைய அடிமை அமைப்பை எதிர்த்து அடிக்கடி கிளர்ந்து எழுந்தனர் என்பது உண்மையே. ஆயினும் அவர்கள் அந்த அமைப்பை வன்மையால் உடைத்து புதியதொரு அமைப்பை ஏற்படுத்தியதாக வரலாறு இல்லை.

ஆயினும் அடிமை அமைப்பு அதனுள்ளே தோன்றிய அக முரண்பாடுகளால் காலப்போக்கில் உடையத் தொடங்கியது.

எசமானர்கள் உழைப்பதையே அவமானமாகக் கருதினர். அடிமைகளை மேற்பார்வை செய்வதற்கும்கூட அடிமைகளையே நியமித்தனர். அடிமைகளுக்கு உற்பத்தியைப் பெருக்குவதில் ஆர்வமில்லை. எவ்வாறு கஷ்டப்பட்டு உழைப்பினும் பயன் யாவும் எசமானுக்கே சொந்தமாகிறது.

சீமான்கள் மது போன்ற ஆடம்பரப் பொருள்களின் உற்பத்தியிலேயே அதிக ஆர்வம் காட்டினர். அத்தியாவசியப் பண்ட உற்பத்தி வளரவில்லை. அடிமை உடைமை அமைப்பு மாறி நிலவுடைமைச் சமுதாய அமைப்பு ஏற்படத் தொடங்கியது. போதிய நிலமுடையவர்களை நிலப்பிரபுக்கள் என்று மேல்நாட்டில் கூறினர். இந்தியாவில் ஆண்டையர், பண்ணையார், நிலக்கிழார், மிராசுதார், ஜமீன்தார் என்று கூறினர்.

நிலவுடைமை அல்லது பண்ணையடிமை அமைப்பும் ஒரு வகை அடிமை அமைப்பே ஆகும். முன்னர் விலங்குபூட்டப் பட்ட அடிமை இங்கு விலங்கு பூட்டப்படாத நில அடிமை ஆகிறான். அவ்வளவே.

பண்ணை அடிமை முறை உலக முழுவதிலும் சிற்சில வேறுபாடுகளுடன் இயங்கி வந்தது. பண்ணை அடிமை, பண்ணையார் அல்லது ஜமீன்தார் நிலத்தில் குடும்பமாக வாழ அனுமதிக்கப் பட்டான். அவனது நிலத்தில் குடும்பமாக உழைத்தனர். அவனது குடும்பத் தேவைகளைப் பண்ணையார் கவனித்துக் கொள்வார். திருமணம், மரணம் ஆகியவற்றையும் கவனிப்பார். தனது அடிமையாட்களை வைத்து ஒழுங்குகளைக் கவனித்தார். தானாகவோ, பஞ்சாயத்து கூட்டியோ பெரும்பாலும் நீதி வழங்கினார். பெரிய குற்றங்களை மட்டுமே அரசிடம் விட்டார். பண்ணை அடிமைகளை கொல்லுவதற்கோ, சிறைப்படுத்தவோ அவருக்கு உரிமை கிடையாது. அவற்றை அரசு கவனித்து வந்தது. விலங்கு அடிமைகளை விற்று, வாங்கப்பட்டது போல இவர்கள் சந்தைப் பண்டங்களாகக் கருதப்பட வில்லை. சில பகுதிகளில் பண்ணை அடிமைக்குத் தனியாக நிலம் வழங்கப்பட்டது. அதற்காகப் பண்ணை அடிமை பண்ணையாரின் நிலத்தில் குறிப்பிட்ட நாட்களுக்கு இலவசமாக உழைக்க வேண்டும்.

மற்றொரு வழமை, பண்ணையார் நிலத்தில் அடிமை விவசாயி உழுது பயிரிடுவான்; விளைவிக்கும் தானியத்தில் ஒரு பங்கைக் குத்தகை என்ற முறையில் பண்ணையார் அறுவடை அன்று பறித்தெடுத்துக் கொள்வார். இவை பண்ணை அடிமைக்கு உற்பத்தியில் ஆர்வமூட்டி உழைப்பின் உபரி யாவையும் பறித்தெடுப்பதற்கேற்ற புதிய முறைகளே யல்லாது அவனுக்கு விடுதலை தரும் முறைகள் அல்ல. உயிர் வாழ்வதற்கேற்ற ஆகக் குறைந்த தேவைகளையே அவன் உழைப்பு நிவர்த்தி செய்தது.

இத்தகைய நிலவுடைமைச் சமுதாய அமைப்பு மூன்று அம்சங்களைக் கொண்டதாகும். (1) நிலத்தோடு ஒட்டிய உற்பத்தி (2) மனித அத்தியாவசிய தேவைகளையே பெரிதும் நிவர்த்தி செய்யும் அடக்க உற்பத்தி (3) பண்ணை அடிமையை நிலத்தோடு கட்டி வைக்கும் உற்பத்தி.

நான் முன்னர் குறிப்பிட்ட அடிமை முழுக்க எசமானின் சொத்து. பிற உற்பத்திச் சாதனங்கள் போன்று பயன்படுத் தப்படுகிறான். வாழ்க்கைக்கு வேண்டியவற்றை எசமான் தருகிறான். பண்ணை அடிமை தன் உழைப்பின் ஒரு பகுதியை உயிர் வாழ்வதற்கு வைத்துக் கொண்டு மறு பகுதியை நிலப் பிரபுவுக்குக் கொடுக்கிறான். அடிமை போல தன்னையே விற்கவில்லை. ஆயினும். பண்ணை அடிமை நிலத்தைவிட்டு வெளியேற முடியாது. தனது உழைப்பை வெளியே விற்க முடியாது; வெளியே செல்வதாயினும் பண்ணையாரின் அனுமதி பெற வேண்டும்.

நந்தன் என்ற தாழ்ந்த சாதி அடிமையின் கதை படித்தி ருப்பாய். அவன் சிதம்பரம் சென்று வழிபட்டு வருவதற்குப் பண்ணையாரிடம் அனுமதி கேட்கிறான். அவர் நிலமெல் லாம் உழுது பயிரிட்டு, அறுவடை செய்த பின்தான் போகலாம் என்று கண்டிப்பாகக் கூறி விடுகிறார். மனிதர் யாருமின்றி, கடவுள் சிவன்தான் அவருக்கு வந்து உதவ வேண்டியதாயிற்று. பார்த்தாயா!

இத்தகைய அடிமை அமைப்பும் அரசினாலேயே காத்துப் பேணப்பட்டது. அடிமைப்பட்ட விவசாயிகள் பல்வேறு விதமாக அடக்கி ஒடுக்கப்பட்டனர். சாதிப் பிரிவு. மதங்கள் மக்களை விடுதலை பெற முடியாது ஆட்சி செய்தன.

அன்பான,
அப்பா

## 16. பண்டமும் பணமும்

அன்பின் மகளே,

பண்டையச் சமூக அமைப்பில் உணவு தேடுவதை ஒட்டியே வேலைப் பிரிவினை ஏற்பட்டதுபற்றி முன்னரும் எழுதினேன்.

அம்பும் வில்லும்—வேட்டையாடி வாழ்வதற்கு வழி வகுத்தது. இரும்புக் கருவிகள் பயிரிட்டு வாழும் முறையை வளர்த்தது. பழத்தைச் சாப்பிட்டு விதையை நிலத்தில் போட மரம் முளைத்ததைக் கண்டே பயிரிடுவதையும் ஆதி மனிதன் அறிந்துகொண்டான். உணவுக்காகக் கொன்ற மிருகங்களின் குட்டிகள் அவர்களின் பின்னால் தொடர் வதைப் பார்த்தே மிருகங்களை வளர்த்து வாழ்வதைத் தெரிந்து கொண்டான்.

மற்றொரு பகுதியினர் உலோகங்களைத் தேடி கருவி களைச் செய்தனர். இன்னொரு பகுதியினர் உடைகளைத் தயாரித்தனர். இவ்வாறு வேலைப் பிரிவினை வளர்ந்தது.

பயிரிடுவோருக்குக் கருவி, இறைச்சி, பால் தேவைப் பட்டது. மந்தை வளர்த்தோருக்குத் தானியம், உடை தேவைப்பட்டது. கருவி செய்தோருக்கு உணவு, உடை தேவைப்பட்டது.

அவரவர்கள் தமது பண்டங்களை மற்றவரிடம் கொடுத்துத் தமக்குத் தேவைப்பட்டதைப் பெற்றுக் கொண்டனர். உதாரணமாக, விவசாயி 6 படி நெல்லைக் கொடுத்து ஒரு ஆட்டை வாங்கினான்: 2 படி நெல்லைக் கொடுத்து ஒரு கத்தி வாங்கினான். கருவி செய்த கம்மாளன் 3 கத்தியைக் கொடுத்து ஓர் ஆட்டை வாங்கினான்.

இதையே பண்டமாற்றுப் பரிவர்த்தனை என்று கூறுவர். கிராமப் புறங்களில் இன்றும் இம் முறைகள் நிலவுகின்றன. தம்மிடமுள்ள நெல்லையோ, பருத்தியையோ அல்லது பிற தானியத்தைப் போட்டுவிட்டுத் தமக்குத் தேவையான பண்டங்கள் வாங்கிக் கொள்வதைக் கிராமக் கடைகளில் காணலாம்.

எவ்வாறு இங்கு விலை தீர்மானிக்கப்பட்டது என்று நீ ஆச்சரியப்படலாம். இத்தகைய பண்டமாற்றில் அதிக ஏமாற்று நடைபெற வாய்ப்பில்லை. கம்மாளன் நாளுக்கு ஒரு கத்தி செய்கிறான். நெசவாளி இரண்டு நாளில் ஒரு வேட்டி நெய்கிறான். இவ்வாறாயின் கம்மாளன் 2 கத்தியைக் கொடுத்து நெசவாளியிடம் ஒரு வேட்டியைப் பெற்றுக் கொள்கிறான். இது நியாயந்தானே. பண்டம் உழைப்புச் சக்திக்குச் சமானம்.

ஒரு பண்டத்தைக் கொடுத்துவிட்டு தனக்குத் தேவையான வேறொரு பண்டம் வாங்கிக் கொள்வதைப் பண்டம்→ பண்டம்→ பண்டம் என்று விளக்கிக் காட்டுவர்.

மக்கள் பெருகி வந்தனர். உற்பத்திகளும் பண்டங்களும் பெருகின. ஒவ்வொரு உற்பத்தியில் ஈடுபட்டிருந்தோரும் வெவ்வேறு தூர இடங்களில் இருந்தனர். அத்தகைய நிலையில் பண்டங்களைக் கொடுத்துப் பண்டங்களை வாங்கும் பண்ட மாற்றுப் பரிவர்த்தனை முறை சிரமமாக இருந்தது.

அவ்வேளையில் உற்பத்தியில் ஈடுபடாத புதிய வர்க்கம் புதிய சரக்குடன் சமுதாயத்தில் நுழைந்தது. இவரின் நுழைவால் சமுதாய அமைப்பே பெருமாற்றம் அடைந்தது. அப்புதிய வர்க்கம் வணிகர் என்பதும் அப்புதிய சரக்குதான் பணம் என்பதும் நீ அறிய வேண்டியது அவசியமாகும்.

பணம், பண்டப் பரிவர்த்தனையை எளிதாக்கியது. வணிகர்கள் உற்பத்தியாளரின் தேவைகளை நிவர்த்தி செய்தனர். மேலதிக உற்பத்தியைக் குவித்துப் பேணுவது

உற்பத்தியாளருக்குச் சிரமமாக இருந்தது. தற்போது பண மாக்கி வைத்திருக்க முடிந்தது. ஏதாவது தேவைப்படும் போது பணத்தைக் கொடுத்து வாங்க முடிந்தது.

தங்கம், வெள்ளி போன்ற அரிய உலோகங்களையே முதலில் பணமாக அன்று கொண்டனர். பின்னர்தான் அரசு உலோகங்களில் —தாள்களில்—நாணயங்களை வெளியிடும் பொறுப்பை எடுத்துக் கொண்டது.

வணிகன் சமுதாயச் சேவைக்காகப் பண்டப் பரிவர்த்தனையில் இறங்கவில்லை. தன் வாழ்க்கை வளத்திற் காக—லாபம் ஈட்டவே வணிகத்தில் இறங்கினான். பணம் பரிவர்த்தனைப் பொருளாகக் கொண்டுவரப் பட்டது. இவனுக்கு மிக வாய்ப்பாக ஆயிற்று. பண்டங்களை வாங்கிச் சேமித்து வைத்து, கிராக்கி உள்ளபோது விற்கத் தொடங்கி னான்.

மக்கள் தம்மிடமுள்ள உபரிப் பண்டங்களைச் சந்தையில் விற்று பணத்தைப் பெற்றனர். பின்னர் இப்பணம் என்னும் புதிய பண்டத்தைக் கொண்டு தமக்குத் தேவைப்பட்ட பிற பண்டங்களை வாங்கிக் கொண்டனர். இதைத்தான் பண்டம்→பணம்→பண்டம் என்னும் வாய்பாட்டில் விளக்குவர்.

பண்டம்→பணம்→பண்டம் என்ற பரிவர்த்தனைக் காகவே பணம் வந்தது. பண்டம் என்பது மனித உழைப்புச் சக்தியின் விளைபொருள். ஆகவே பணம் மனித உழைப்புச் சக்திகளை இணைத்தது. ஓரளவு சமன் செய்தது.

வணிகன் இந்த இணைப்பை காலப் போக்கில், பணம்→ பண்டம்→பணம் என மாற்றிவிட்டான். பணத்தைக் கொடுத்துப் பண்டத்தை வாங்கிப் பணத்திற்காக விற்பது என்ற புதிய நிலை ஏற்பட்டது. மனித உழைப்புச் சக்திக்கும் பணத்திற்கும் தொடர்பில்லாத புதிய மாற்றம் சமுதாயத் தில் ஏற்பட்டது. தடித்த எழுத்திலுள்ள 'பணம்' முதலில் **உள்ள பணத்திலும் பார்க்க மதிப்பில் கூடியது; உபரி**

மதிப்புக் கொண்டது. உற்பத்தியாளர் மூலப் பொருளையும் (ரூ 10) உழைப்புச் சக்தியையும் (ரூ 15) விலைக்கு வாங்கி ரூ 20 லாபத்துடன் ரூ 45க்கு விற்கும் போது ரூ20 உபரி மதிப்புடன் விற்கப்படுகிறது என்போம். இச்சிறு கணக்கைப் புரிந்து கொள்வாய்.

பணத்தின் வளர்ச்சி மனித வரலாற்றில் எத்தகைய சிக்கல்களையும் மாற்றங்களையும் ஏற்படுத்தியது என்பதை இன்றுள்ள ஏற்றத் தாழ்வுகளிலேயே காணலாம். அதை விரிவாக இனிமேல் பார்ப்போம்.

பண்டைக் கால மனிதர் பணம் என்னும் பண்டமே இல்லாமல் வாழ்ந்திருக்கின்றபோது நாமும் அவ்வாறு வாழ முடியாதா என நீ கேட்கலாம். உண்மைதான். பண்டைக் கால மக்கள் பண்டங்களினால் மட்டுமே பரிவர்த்தனை செய்து கொண்டனர். பயன்பாட்டிற்கான உற்பத்திப் போய் பரிவர்த்தனைக்கான உற்பத்தி என்ற நிலை வரும் போதுதான் 'பணம்' என்பதும் தேவைபோல் பொய்த் தோற்றம் தருகிறது. உலகம் முழுமையும் பொதுவுடைமைச் சமுதாயமாக மலரும்போது பயன்பாட்டிற்கான உற்பத்தியே இருக்கும். அங்கே 'பணம்' என்னும் பண்டம் தேவையற்றுப் போகலாம். இன்று இது கற்பனையாகத் தோன்றலாம். ஆனால் இன்றோ நாளையோ நடக்கப் போகிற சமுதாய நிகழ்வுதான்!

அன்புள்ள,
அப்பா

# 17. வணிக வளர்ச்சி

இனிய மகளே,

பண்ட மாற்றத்திற்காகப் பணம் பயன்பட்டது; பண்டங்களை வாங்கி, விற்பனை செய்யும் மற்றொரு புது வேலைப் பிரிவினை சமுதாயத்தில் தோன்றியது; இவ் வேலையைச் செய்தவர்களையே வணிகர்கள் என முன்னர் கூறினோம். இப்புது வகுப்பினரின் – வணிகர்களின் தோற்றம் சமுதாயத்திலும் பெரிய மாறுதல்களைத் தோற்றுவித்தது.

நிலத்தோடு ஒட்டிய உற்பத்தியில் கிடைத்த உபரியிலும் பார்க்க வணிகத்தில் அதிக லாபம் கிடைத்தது வணிகர்கள் தம்மிடம் சேர்ந்த லாபத்தைக் கொண்டு போக்குவரத்துச் சாதனங்களை விரிவாக்கினர். ஏனெனில், வியாபாரத்திற்கு இவை மிக அவசியமல்லவா? ஆறு, கடல் மார்க்கமே பிரயாணத்திற்கும் பண்டங்களை ஏற்றி யிறக்கவும் வாய்ப் பாக இருந்தது. ஆகவே கப்பல்கள், தோணி கட்டும் தொழில்கள் முக்கியமாக ஐரோப்பாவில் விரிவடைந்தன.

மார்க்கோ போலோ என்பவன் 13 ஆம் நூற்றாண்டுக் கடைசியில் கப்பல் மூலம் கிழக்கு நாடுகளுக்கு முதலில் பிரயாணம் செய்தான்; நன்நம்பிக்கைமுனை வழியாக ஆசிய நாடுகளுக்கு வந்தான்; சீனா வழியாக ஐரோப்பா விற்குத் திரும்பினான்; இவற்றை நீ சரித்திரப் பாடத்தின் போது படித்திருப்பாய். தன் பிரயாண அனுபவங்கள்பற்றி அவன் எழுதிய கட்டுரைகள் ஐரோப்பியருக்கு மிகவும் பயன் பட்டது. 14 ஆம் நூற்றாண்டுக் கடைசியில் தம் நாடுகளிடை வணிகம் செய்த ஐரோப்பிய வணிகர்கள் கப்பல் மூலம் கீழ்நாடுகளுக்கு வந்து பண்டங்களை வாங்கி, விற்கத் தொடங்கினர். இது மிகவும் பெரிய லாபகரமான தொழி லாக இருந்தது.

அவ்வேளை, சிறு பட்டறைத் தொழில் ஐரோப்பாவில் வளர்ச்சி பெற்றிருந்தது. அங்குள்ள உலோகக் கருவிகளை இங்குள்ள மன்னர், நிலப்பிரபுகளுக்கு விற்று, தம் நாட்டு நிலப்பிரபுகளுக்கு விற்கக்கூடிய உணவுப் பொருட்கள், பருத்தி பட்டு ஆடைகள், தங்கம், வெள்ளி ஆகியவற்றை மலிவான விலையில் பெற்றுச் சென்றனர்.

மேல்நாட்டு நிலப்பிரபுகளுக்குப் பிடித்த ஏலம், கறுவா, கிராம்பு போன்ற வாசனைத் திரவியங்களுக்காகவே ஐரோப்பியர் இலங்கைக்கு வந்தனர் என்று நீ படித்திருப்பாய்.

இவ்வணிகங்களில் நூறு மடங்கு வரைகூட லாபம் கிடைத்ததாம். இதனால் ஐரோப்பிய நாடுகளிலுள்ள வியாபாரிகளெல்லாம் கப்பல் கட்டிக் கீழ்நாடுகளுடன் வணிகத்தில் போட்டி போட்டு ஈடுபட்டனர்.

ஸ்பெயின், போர்த்துக்கல், ஒல்லாந்து, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளெல்லாம் போட்டியிட்டு வணிகத்தில் ஈடுபட்டனர். இப் போட்டியில் கீழ் நாடுகளைப் பிடித்து அடிமைப் படுத்தும் கெடுபிடி ஏற்பட்டது. அவ்வேளை தமக்கு வேண்டிய பொருட்களை விரும்பிய விலையில் பறித்து எடுக்க முடியுமல்லவா?

ஐரோப்பாவில், 'உலகம் தட்டையானது அல்ல, உருண்டையானது' என்ற கருத்து வலுவடைந்து வந்தது. கிழக்கேயிருந்த ஆசிய நாடுகளுக்குப் புதிய, கிட்டிய வழி காட்டித் தருவதாகக் கொலம்பஸ் என்ற மாலுமி புறப்பட்டான். ஐரோப்பாவிலிருந்து மேற்கு வழியாக 1493இல் புறப்பட்டு மேற்கிந்தியத் தீவுகளைக் கண்டுபிடித்தான். அதைத் தொடர்ந்து அமெரிக்காக் கண்டம் கண்டுபிடிக்கப் பட்டது. புதிய கண்டம் வணிகர்களுக்கு மேலும் வாய்ப்பை அளித்தது.

வணிகத் தொழிலில் குவிந்தலாபம் ஐரோப்பாவில் பட்டறைத் தொழிலை மேலும் மேலும் விரிவாக்கி வளர்த்தது. துப்பாக்கியையும் அவர்களே முதலில் கண்டுபிடித்தனர்.

இதனாலேயே நாடுகளை அடிமைப்படுத்தவும் முடிந்தது. துப்பாக்கியே அவர்களது தொழில் உற்பத்தியின் வளர்ச்சியைக் காட்டுகிறது. எம் நாடுகளில் துப்பாக்கி முதலில் கண்டுபிடிக்கப் பட்டிருப்பின் எம் மனிதர்கள் ஐரோப்பியரை அடிமைகளாக்கி ஆண்டிருப்பார்! ஐரோப்பியர், அமெரிக்காவில் பரந்த செழிப்பான நிலவளத்தைக் கண்டனர். அங்கு வாழ்ந்த பூர்வீகக் குடிகளை, மிருகங்களை வேட்டையாடுவது போலச் சுட்டுக் கொன்று அவர்களது நாட்டை ஆக்கிரமித்துக் கொண்டனர்.

வணிகம் என்பது பணத்தை வைத்துப் பணம் பண்ணுவது; லாபம் பெறுவது. லாபம், வட்டி, வாடகை, குத்தகை ஆகியவற்றை அறவிடுவதும் உபரியை அபகரிப்பதே. இவை நேரடியான சுரண்டல்கள். பொருளாதார முறையாக (Economic System) அபகரிக்கப்படுவது, தொழிற்சாலையில் தொழிலாளரிடம் அபகரிக்கப்படுவது மறைமுகமாகப் பறிக்கப்படும் உபரி ஆகும். இவ்வேறுபாடுகளையும் அறிந்துகொள். ஏனெனில் இத்தொழிலாளரே சமுதாயத்தை மாற்றும் புரட்சியில் முன் நிற்பர் என்பதைப் பின்னர் கற்றுக்கொள்வாய்.

அன்புள்ள,
அப்பா

# 18. அடிமை வணிகம்

அன்பிற்கினிய மகளுக்கு,

புதிதாகக் கண்டுபிடித்த அமெரிக்க நாடுகளில் பருத்தி, கரும்பு, காப்பித் தோட்டங்களை ஐரோப்பியர் ஆரம்பித்தனர். அங்கு நிலத்தில் உழைப்பதற்குப் போதிய ஆட்கள் கிடைக்கவில்லை. ஐரோப்பாவில் தொழில்வளம் பெருக ஆரம்பித்ததால் கூலி உழைப்பாளராக அமெரிக்காவிற்குச் செல்ல எவரும் விரும்பவில்லை. ஆகவே ஆப்பிரிக்காவிலிருந்து நீகிரோக்களை, துப்பாக்கியைக் காட்டி அடிமைகளாக்கிக் கப்பல்களில் ஏற்றிச் சென்று அமெரிக்காவில் விற்றனர். அடிமை வியாபாரமே மிகப்பெரிய வாணிபமாக 17, 18, 19ஆம் நூற்றாண்டுகளில் நடந்தது. ஹாக்கின்ஸ் என்ற ஆங்கிலேயன் இந்த வியாபாரத்தில் பெருந்தலைவனாக விளங்கினான். இவனுக்கு அவ்வேளை இங்கிலாந்தில் மகாராணியாக ஆண்ட முதலாவது எலிசபெத் (1558-1603) ராணி 'சேர்' பட்டம் வழங்கிக் கௌரவித்தார்! 1800 வரையில் மொத்தம் 1.5 கோடி அடிமைகள் அமெரிக்காவில் விற்கப்பட்டனர்.

பண்டையச் சமுதாயத்தோடு தோன்றி வீழ்ச்சியடைந்த அடிமை உற்பத்திமுறை மீண்டும் தலைதூக்கியது. ஆப்பிரிக்காவிலிருந்து மட்டுமே அடிமைகளைப் பிடித்துச் சென்று அமெரிக்காவில் விற்றனர். ஆப்பிரிக்காவில் உற்பத்தி வளர்ச்சியடையாத நிலையில் பழங்குடிச் சமூக அமைப்பு நிலவுவதும் இதற்கு ஒரு காரணமாகும். 16, 17ஆம் நூற்றாண்டுகளில் ஆசிய நாடுகளில் நிலப்பிரபுத்துவ அமைப்பு நிலைபெற்று விட்டது.

மேற்கு ஆப்பிரிக்க நாடுகளிலிருந்தே பெரும்பாலான நீகிரோ அடிமைகள் ஏற்றப்பட்டனர். சில நாடுகளில் குடிமக்களின் தொகை பாதிக்குக் கீழாகக் குறைந்துவிட்டது.

ஏற்றிச் செல்லப்பட்ட கப்பல்களில் போதிய உணவு, நீர், சுகாதார வசதிகளே கிடையாது. இதனால் பட்டினி, தொற்று நோயாலும் லட்சக்கணக்கான ஆப்பிரிக்கர்கள்

இறந்து ஒழிந்தனர்; கப்பலில் ஏற்றப்பட்ட நீகிரோ மக்கள் கடலிலே வீசப்பட்டனர்.

அமெரிக்கப் பூர்வீகக் குடிகளைச் சிவப்பிந்தியர் என்று அழைப்பர். அவர்கள் போர்க்குணம் மிக்கவர். அவர்கள் அடிமையாக உழைக்க மறுத்தனர். தாம் வாழ்ந்த நாட்டை ஐரோப்பியர் ஆக்கிரமிப்பதையும் எதிர்த்தனர். ஐரோப்பி யரிடம் துப்பாக்கி இருந்ததால் சிவப்பிந்தியர்களை வேட்டையாடிக் கொன்றனர்.

நான் சிறுவனாக இருந்தபோது எம் கிராமத்தில் ஒரு சங்கம் இருந்தது. பாம்பை அடித்துச் சென்று சங்கத் தலைவரிடம் காட்டினால் ஒரு ரூபா பணம் கொடுப்பார். இவ்வாறு பாம்புகளைக் கிராமத்தில் கொன்றனர். அதே போல அமெரிக்காவில் சிவப்பிந்தியரைக் கொன்று தலை யைக் கொடுப்பின் 100 பவுன் வரையில் பரிசு கிடைக்கும். இத்தகைய கொடுமைகள் சில நூற்றாண்டுகளின் முன்னரே நடைபெற்ற அதே ஐரோப்பியர், அமெரிக்கர் என்ற பெயரில்இன்று உலகிற்கு நாகரிகம் போதிக்கின்றனர்.

இங்கிலாந்து, இந்தியா, இலங்கையில் 1843இல் சட்டப் பூர்வமாக அடிமை முறை ஒழிக்கப்பட்டது. அமெரிக்காவில் அடிமை முறையை ஒழிப்பதற்கு ஓர் உள்நாட்டுப் போரே நடைபெற்றது. ஆபிரகாம் லிங்கன் ஜனாதிபதியாக வந்து அமெரிக்காவில் 1861இல் அடிமை முறையை ஒழித்தார்.

அடிமை முறை சட்டப் பூர்வமாக ஒழிக்கப்பட்டபோதும் இன்றும் மிச்ச சொச்சங்களைக் காணலாம்.

உழைத்ததற்கு கூலி கொடுக்கா நிலை அடிமை நிலையே. கூலி கேட்காது வயிற்றை மட்டும் நிரப்ப உழைத்து வருபவர்களும் அடிமைகளே. இன்றும் கூலி பெறாது பல அடிமைகள் வீடுகளில் வேலை செய்வதை நீ பார்த்திருப்பாய்!

அன்புள்ள,
அப்பா

# 19. ஐரோப்பிய மறுமலர்ச்சி

அன்புநிறைந்த மகளுக்கு,

கலை உணர்வு தோன்றிய வரலாறுபற்றி முன்னர் எழுதினேன். சமுதாயத்தில் உற்பத்திக்கருவிகள் வளர்ந்து உற்பத்தி முறைகள்—உற்பத்தி உறவுகள் மாறும்போதெல்லாம் கலை, இலக்கியங்களும் மாறுகின்றன.

வணிக மூலதனம் ஐரோப்பாவில் வளர்ச்சியடைவதையொட்டி மதம், கலை இலக்கியத்திலும் புதிய மாற்றம், விழிப்பு ஏற்படத்தொடங்கியது. இதை 'மறுமலர்ச்சிக் காலம்' எனச் சரித்திரப் பாடத்தில் நீ படித்திருக்கலாம்.

தமிழ்நாட்டில் வணிகவர்க்கம் தலைதூக்க முயன்றதையொட்டிச் சிலப்பதிகாரம் என்ற காப்பியம் தோன்றியது பற்றி அறிந்திருப்பாய். கோவலன் ஒரு வணிகன். வணிகனைக் கதைத் தலைவனாகக் கொண்ட முதல் காவியம் இதுவே. ஆயினும் கதையின்படி, கோவலன் வீழ்ச்சியே யடைகிறான். வணிகவர்க்கம் ஆளும் வர்க்கமாக வெற்றி பெறவில்லை என்பதையே காவியமும் கூறுகிறது. சமூகம் அவ்வாறே இருந்தது.

முதலாவது எலிசபெத் காலத்திலேயே (1558-1603) சேக்ஸ்பியர், மாலோ போன்ற சிறந்த நாடகாசிரியர் தோன்றினர். சேக்ஸ்பியரின் நாடகங்களை இனிமேல் ஆங்கில மொழியில் நீ கற்பாய். மன்னர்களிடையே நிலவிய முரண்பாடுகள். போட்டி பொறாமைகள், நிலையற்ற மனோபாவங்களை அவரது நாடகங்களில் சாதாரணமாகக் காணலாம். ஹம்லெட் என்ற கதாநாயகனே ஊடாட்ட மனோபாவங்கொண்ட மன்னனாக சித்தரிக்கப்படுகிறான். ரோமியோ-ஜூலியட் சினிமா நீ பார்த்திருப்பாய். இருநிலப் பிரபுத்துவக் குடும்பங்களிடை பகைமை; காதல் எதிர்ப்பு;

தற்கொலை; இரு குடும்பங்களுமே பாதிக்கப்படுகின்றன. இவை யாவுமே நிலப்பிரபுத்துவ மன்னர் ஆட்சிகளின் வீழ்ச்சியின் ஆரம்பத்தைக் காட்டுகின்றன. புதிய வணிக வர்க்கத்தின் தேவைகளுக் கேற்ப புதிய கலை இலக்கியங்கள் உருவாகின்றன. சேக்ஸ்பியர் நாடகங்கள் அச்சேற்றப் பட்டுப் புதுவர்க்கங்களால் படித்து ரசிக்கப்படுகின்றன. ஹம்லெட் நாடகம் முதலில் அச்சடிக்கப் பட்டபோது சேக்ஸ்பியரால் எழுதப் பட்டது என்பதே குறிப்பிடப்பட வில்லை!

ஒவ்வொரு வர்க்கச் சமுதாயமும் வர்க்கம் சார்ந்து பயன்படக்கூடிய கலை, இலக்கிய வல்லுனர்களை உயர்த்து வது இயல்பே. சேக்ஸ்பியரும் உயர்த்தப்பட்டார்.

மதத்திலேயும் மறுமலர்ச்சி ஐரோப்பாவில் ஏற்பட்டது என்று கூறினேனல்லவா? அங்கு நீண்ட காலமாகவே கத் தோலிக்க மதமே ஆதிக்கம் பெற்ற மதமாக விளங்கியது. வணிக மூலதனத்தோடு ஏற்பட்ட சமூக மாற்றத்திற்கு அம்மதம் இயைந்து கொடுக்கவில்லை. அதே வேளை மதம் வணிக மாற்றத்தை ஒட்டிப் பணம் சேர்க்கப் புதிய வழி களைக் கைக்கொண்டது.

வணிகம் என்றதும் புதுமுறையாகக் கணக்கு எழுத வேண்டும். இதையே பற்று வரவுக் கணக்கு என்பர். நாம் கடையில் எழுதுதை நீ பார்த்திருப்பாய். அதேபோல பாவங்களைப் 'பற்று' ஆக எழுதி, அவற்றுக்கு எதிராகப் பாவமன்னிப்புச் சீட்டுகளை வாங்கி 'வரவு' எழுதி விட லாம் என கத்தோலிக்க மதம் ஒரு புதிய வியாபார முறையை ஏற்படுத்தியது. பாவமன்னிப்புச் சீட்டுகள் கிறிஸ்தவ ஆலயங்கள் மூலம் விற்கப்பட்டன. இதை எதிர்த்து மாட்டின் லூதர் (1483-1546) என்ற ஜெர்மானியன் போர் தொடுத்தான். வெட்டிக்கன் போப் சும்மா விடுவாரா? அவனுக்கு அழைப்பாணை அனுப்பினார். அவன் அவர் ஆணையை (1522) தெருவில் போட்டுத் தீயிட்டான்.

மார்ட்டின் லூதர் புதிய ஏற்பாடு (பைபிள்) நூலை எழுதினான். புரொட்டெஸ்டன் என்ற புதிய கிறிஸ்தவ மதம் பிறந்தது. கத்தோலிக்க மதத்தை விட்டுச் சில மன்னர் புதிய மதத்தைச் சார்ந்தனர். அதைத் தொடர்ந்து சிலுவை யுத்தம் ஐரோப்பாவில் தொடங்கியது. வணிக மூலதன ஆதிக்கம் நீடித்திருந்தவரை சிலுவை யுத்தமும் நடந்து கொண்டேயிருந்தது. ஏறக்குறைய 300 ஆண்டுகள் விட்டு விட்டு நடந்தன. இயந்திர உற்பத்தியோடு தோன்றி வளர்ந்த முதலாளித்துவ ஆதிக்கம் ஏற்படும்வரை மதப் போர்கள் நிற்கவில்லை. உள்நாட்டுப் பகைகள் காலனி ஆதிக்கங்கள் கைமாறும் அளவிற்கு நீண்டன. யாவிற்கும் வணிகப்போட்டி, நாடுபிடிக்கும் போட்டி, காலனி ஆதிக்கப் போட்டியே அடிப்படைக் காரணமாகும்.

அன்புள்ள,
அப்பா

# 20. குடியேற்ற நாட்டு ஆட்சியின் தோற்றம்

அன்பான மகளுக்கு,

போர்த்துக்கீசர் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவர். இவர்கள் இலங்கையை 1505இல் கைப்பற்றினர். 150 ஆண்டுகளின் பின் 1658இல் டச்சுக்காரர் போர்த்துக்கீசரை விரட்டிவிட்டு இலங்கையை ஆண்டனர். அதன்பின்னர் பிரிட்டிஷ்காரரின் கிழக்கிந்தியக் கம்பெனியார் 1798இல் எம் நாட்டை அடிமைப்படுத்தினர்.

கிழக்கிந்தியக் கம்பெனியா என்று கேட்கிறாயா? ஆமாம். கம்பெனியே தான். முதலாவது எலிசபெத்ராணி 1610இல் இக் கம்பெனி ஆசிய நாடுகளில் ஏகபோக வணிகம் நடத்த பதிவு செய்து அனுமதி வழங்கினாள். இக்கம்பனி கொள்ளையடிக்கும் வணிகம் புரிந்தது. வணிகத்தில் போட்டி ஏற்பட, நாடுகளைப் பிடிக்கத் தொடங்கியது. இக்கம்பெனி படையே வைத்திருந்தது. கல்கத்தாவில் நுழைந்து மன்னர்களை விரட்டி இந்தியாவையே ஆக்கிரமித்தது.

இந்தியாவிலிருந்து பட்டு, பருத்தித்துணிகள், கைத்தொழிற் பொருட்களை ஏற்றிச் சென்று இங்கிலாந்தில் கம்பெனி விற்றது. அங்கு இயந்திரப் புரட்சி ஆரம்பித்ததும் முதலாளிகளுக்கு வேண்டிய மூலப் பொருட்களை மலிந்த விலையில் ஏற்றிச் சென்றது. பின் இயந்திரத் துணிகளை இந்தியாவில் விற்க ஆரம்பித்தது. இந்தியாவின் கைத்தறி உற்பத்தி வீழ்ச்சியடைந்தது.

இயந்திர உற்பத்தியில் ஈடுபட்ட முதலாளி வர்க்கப் புரட்சி சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியில் இங்கிலாந்தில்

பூரணத்துவ மடைந்தது. இயந்திர உற்பத்தியாளர்கள் ஆதிக்கம் பெற்றனர்.

இந்தியாவில் 1856-57இல் சிப்பாய்க் கலகம் ஏற்பட்டது. கிழக்கிந்தியக் கம்பெனியாரை எதிர்த்து, அவர்களே அமைத்த இந்திய ராணுவத்தினர் கலகம் செய்தனர்.

வணிகத்திற்காகத் தோற்றுவிக்கப்பட்ட கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியநாட்டை ஆள்வதற்குத் தகுதியற்றது என இங்கிலாந்தில் ஆதிக்கம் பெற்ற முதலாளித்துவ அரசு கருதியது. இந்தியா, இலங்கை போன்ற பிரிட்டிஷ் காலனி களை ஆளும் பொறுப்பைப் பிரிட்டன் அரசே ஏற்றுக் கொண்டது. உலகெங்கும் காலனிகளை ஏற்படுத்தியது. 'எமது சாம்ராச்சியத்தில் சூரியன் மறைவதில்லை' என ஆங்கிலேயர் பெருமையாகக் கூறிக்கொண்டனர். கிழக்குப் பகுதியில் சூரியன் மறையும்போது மேற்குப் பகுதியிலுள்ள அவர்களது நாடுகளில் சூரியன் உதயமாவான்.

இவ்வாறு நாடுகளைப் பிடித்து ஆளுவதைக் குடியேற்ற நாட்டு ஆட்சி அல்லது காலனித்துவம் என்பர். இது ஒரு வித பொருளாதார அரசியல் அமைப்பே.

முன்னர் அடிமைகளின் உழைப்பின் உபரியை அபகரித்துச் சேர்க்கும் அடிமை உடைமைச் சமுதாயத்தின் அமைப்பைப் பார்த்தோம்.

பண்ணை அடிமை மூலம் உபரியை அபகரிப்பது நிலப் பிரபுத்துவம்.

வியாபாரம் மூலம் லாபம் சேர்த்துக் குவிக்கும் சமூக அமைப்பையும் பார்த்தோம்.

குடியேற்ற நாட்டு ஆட்சி என்பது தமது படையை நிலையாக வைத்து ஆள்வது; அந்நாட்டு மக்களது உபரி உழைப்பை, நிலவளங்களை அபகரித்துச்சென்று தமது நாட்டில் மூலதனமாக்குவது. பிரிட்டனில் இயந்திரத்

தொழில் வளர்ந்தது. குடியேற்ற நாட்டு மூலப்பொருட்கள் பிரிட்டனில் இயந்திரப் பண்டங்களாயின. மீண்டும் குடியேற்ற நாட்டிலேயே அப்பண்டங்கள் கொள்ளை விலையில் விற்கப்பட்டன. இந்தியாவில் பருத்திக்கு நடந்ததை மேலே கூறினேனே.

நீ பள்ளியில் பென்சிலால் எழுதுவதை அழிக்க வீனஸ் இறேசர் வேண்டுமென்று அடம்பிடிப்பாயே. எம்நாட்டு ரப்பர் பிரிட்டனுக்குச் சென்று அழிரப்பராக இயந்திரப் பண்டமாக வருகிறது. ஒரு ராத்தல் ரப்பரை ஒரு ரூபாவிற்கு விற்கிறோம். 72வீனஸ் அழிரப்பர் ஒரு ராத்தல் ஆகும். ஒரு ரப்பருக்கு நீ 50 சதம் கொடுக்கிறாய். செலவு தள்ளினும் அவர்களுக்கு 30 மடங்கு லாபம் வரை கிடைக்கும். இவ்வாறு காலனி நாடுகளைக் கொள்ளை யடித்து முதலாளித்துவ நாடு பின் ஏகாதிபத்தியமாக மாறுகிறது. ஏகாதிபத்தியம் என்பது முதலாளித்துவத்தின் உச்சக் கட்டம். முதலில் முதலாளித்துவம் என்றால் என்ன?

அன்புள்ள,
அப்பா.

# 21. இயந்திர உற்பத்தியின் வளர்ச்சி

அன்பு மகளுக்கு,

பணக்காரரைப் பார்த்தே நீ முதலாளிகள் என்று கூறுவாய். பணக்காரரின் ஆட்சியே முதலாளித்துவம் என்றும் சொல்லுவாய். பணம் ஆதிக்கம் பெற்ற சமுதாயம் ஆனபடியினாலேயே இவ்வாறு எண்ணத் தோன்றுகிறது.

முதலாளித்துவம் என்பதை மேலும் ஆழமாகப் பார்ப்போம். மூலதனத்தை ஆள்பவர்களே முதலாளிகள் என்றே நாம் உண்மையில் கருதுகிறோம். மூலதனம் என்றால் என்ன? மூலதனம் எவ்வாறு சிலர் கையில் குவிகிறது? எப்படி அவர்கள் முதலாளி ஆனார்கள்?

சமூகத்தில் வேலைப் பிரிவினை ஏற்பட்டது பற்றி முன்னர் படித்தாயல்லவா? சமூக வரலாற்றில் நிலப் பிரபுத்துவ அமைப்பில், அரசு தோன்றி வளர்ச்சியடையும் போது மூன்று வகையாக மக்கள் பிரிந்தனர். 1) சொத்து களையும் பண்ணை யடிமைகளையும் கொண்ட நிலப்பிரபுக் கள் 2) நிலத்தோடு கட்டுப்பட்ட பண்ணை அடிமைகள் 3) சுயேச்சையான சிறு உற்பத்தியாளர் அல்லது சுயேச்சை யான உழைப்பாளர்.

மூன்றாவது வகையினரும் நிலப்பிரபுவுக்குக் கட்டுப் பட்டே ஒரு காலத்தில் வாழ்ந்தனர். இவர்களே கலப்பை, ஏர், வண்டி, கடப்பாரை, மண்வெட்டி, கத்தி, வாள், ஈட்டி, கோடரி, கேடயம், லாடம், அச்சுக்கள், பூட்டுகள், சாவிகள் போன்ற சிறு பண்டங்களை உற்பத்தி செய்தவர்கள். பட்டறை உற்பத்தி என்று இவற்றையே முன்னர்க் குறிப் பிட்டேன். உழைப்போர் நிலப்பிரபுவின் அடிமைகளாக உற்பத்தியில் ஈடுபட்டிருந்தபோது உற்பத்தி வளர்ச்சியடைய

வில்லை. காரணம் உற்பத்தி உறவு சமூகமாக இல்லா திருந்தது. அதாவது உழைப்பாளருக்கு உற்பத்தியில் நாட்ட மில்லை; உற்பத்தியை எவ்வாறு உயர்த்தினும் அவர் களுக்குப் பயனில்லை; அவர்கள் அடிமைகளே. வயிற்றுக்கு உணவு மட்டுமே கிடைத்து வந்தது. நிலப்பிரபு தன் தேவை களின் போது உற்பத்தியை உயர்த்த அவர்களுக்கு ஓரளவு சுதந்திரம் வழங்கினான். உற்பத்திப் பண்டத்திற்கு ஒரு குறிப்பிட்ட விலை தருவதாகக் கூறினான். சிறு உற்பத்தி யாளர் வளர்ந்தனர்.

இதனால் பட்டறைத் தொழில் வளர்ச்சியடையத் தொடங்கியது. இரும்பு, நிலக்கரி உள்ள இடங்கள் அல்லது இவை வந்து இறங்கும் துறைமுகங்களிலேயே பெரும்பாலும் வளர்ந்தது. மேல் நாடுகளில் வணிக மூலதனம் வளர்ச்சி யடைய பட்டறைத் தொழிலும் விரிவடைந்து. இது விவசாயத்திலும் பார்க்க லாபகரமான தொழிலானது.

பட்டறைகளில் வேலை செய்யக் கிராமத்திலிருந்து விவசாயிகள் வரத் தொடங்கினர். வளர்ந்து வரும் புதிய சமூகமொன்று பட்டறைகளை ஒட்டி வளரத் தொடங்கியது. அதுவே நகரமாகும். நீர்வீழ்ச்சியின் சக்தி, நீராவியந்திரச் சக்திகளை உற்பத்தியில் நுழைத்தனர். பட்டறைகள் தொழிற்சாலைகள் ஆகின. சொத்துகள் எதுவுமின்றி பண்ணை அடிமைகளாக வாழ்ந்த ஆயிரக் கணக்கான உழவர்கள், நிலங்களை விடுத்துவிட்டு தொழிற்சாலைகளில் வேலை செய்தனர். இவர்களிடம் 12—18 மணி நேர உழைப்புச் சக்தியை முதலாளிகள் கூலிக்கு வாங்கினர். பல நூற்றாண்டுகளாக நிலத்துக்கு அடிமையாக வாழ்ந்த மக்கள், இப்புதிய சமூகத்தில், கூலிக்கு அடிமையாயினர். தமது உழைப்புச் சக்தியை கூலிக்கு விற்றனர். கிடைத்த கூலி வயிற்றை மட்டும் நிரப்பி மறுநாள் வேலைக்குச் செல்வதற்கு மட்டும் போதுமானதாக இருந்தது.

அதே வேளை இவர்கள் உழைப்புச் சக்தியை விலைக்கு வாங்கிய முதலாளி தொழிற்சாலையை மேலும் மேலும் விரிவாக்கி, மேலும் மேலும் இயந்திரங்களைப் புகுத்தி பண்ட உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டே இருந்தான். மேலும் மேலும் மூலதனத்தைப் பெருக்கி மேலும் மேலும் ஆதிக்கம் பெற்று வந்தான். உழைத்தவர்களின் வாழ்வு மட்டும் அப்படியேதான் இருந்தது. இது சமூகத்தில் முரண் பாட்டை ஏற்படுத்தியது.

அன்புள்ள,
அப்பா

# 22. முதலாளித்துவம் என்றால் என்ன?

அன்புள்ள மகளுக்கு,

நகரங்களில் புதிதாகத் தோன்றி வளர்ந்த சமூக அமைப்பைப் பற்றிப் பல சமூக விஞ்ஞானிகள் ஆராயத் தொடங்கினர்; பலர் கவலையும் பட்டனர். அங்கு குடியேறி நாள் முழுவதும் உழைக்கும் தொழிலாளரின் வாழ்க்கை நிலை அத்தனை மோசமாக இருந்தது.

கார்ல் மார்க்ஸ் (1818—83) என்ற ஜெர்மனிய அறிஞர் இது பற்றி ஆழ்ந்து ஆராய்ந்து கற்றார். விஞ்ஞான பூர்வமான பல உண்மைகளைக் கண்டுபிடித்தார். அதுவே நான் முன்னர் குறிப்பிட்ட இயக்கவியல் பொருள் முதல்வாதம் என்பதாகும். இதைவிடப் புதிய அரசியல் பொருளாதாரம் ஒன்றையும் கண்டு பிடித்தார். பண்ட விற்பனையில் உபரி மதிப்பு எவ்வாறு மூலதனமாகிறது; தொழிலாளர்களது உழைப்புச் சுரண்டப்படுகிறது, முரண்பாடு ஏற்படுத்துகிறது என்பதைக் கணித்து நிரூபித்தார். மூலதனம் என்ற அவரது பெரிய நூலின் உயிர்நாடி இதுவே ஆகும். மார்க்ஸ் 25 ஆண்டுகள் இந் நூலை எழுதுவதற்காக உழைத்தார். குடும்பம் வறுமையில் வாடியபோதும் தொழிலாளர் விடிவுக்காக இந் நூலை எழுதினார். உலகத் தொழிலாளரின் மிகப் பெரிய மூலதனம் இந் நூலே. ஏங்கெல்ஸ் (1820-95) என்ற ஆங்கில அறிஞரும் மார்க்ஸ் அவர்கட்குத் துணையாக நின்றார்.

**மனித உழைப்பு இல்லாமல் உலகில் எந்தப் பண்டமும் தோன்ற முடியாது.** நீ எழுதும் பேனா, போடும் சட்டை, **தைக்கும் ஊசி, படிக்கும் நூல்கள், விளையாடும் பந்து**

எல்லாமே மனித உழைப்பாலேயே ஆனவை. அவற்றின் விலை மதிப்பு உழைப்பின் மதிப்பைக் கொண்டே தீர்மானிக்கப்படுகிறது.

தொழிலாளி அடிமைபோல் தன்னை விற்பதில்லை. தன் உழைப்பையோ, உற்பத்தி செய்த பொருளையோ விற்பதில்லை. ஏனெனில் அவன் உழைப்பு அவனுக்குச் சொந்தமில்லை. தன் உழைப்புச் சக்தியைத்தான் முதலாளிகளுக்கு, தான் உயிர் வாழ்வதற்காக விற்கிறான்.

முதலாளிகள் தொழிலாளர்களின் உழைப்பின் மதிப்புக்கு ஏற்ற கூலி வழங்குவதில்லை. அவர்கள் மூலப் பொருட்களை விலை கொடுத்து வாங்குவதுபோலத் தொழிலாளர்களின் உழைப்புச் சக்தியையும் கூலி கொடுத்து வாங்குகிறார்கள். இரண்டும் இணைந்த பண்டத்தை, பின்னர் தாம் விரும்பிய விலையில் விற்று விடுகிறார்கள். பண்டத்தின் மதிப்பில் விற்கும்போதே அவர்களுக்கு உபரி கிடைக்கிறது. இவ்வாறு மார்க்ஸ் கண்டுபிடித்தார்.

ஒரு தொழிலாளி 10 மணி நேரம் உழைத்து ஒரு பண்டத்தைப் படைக்கிறான். அவன் உபயோகப்படுத்திய மூலப் பொருட்களின் மதிப்பு ரூ. 5 -. பண்டத்தின் மதிப்பு ரூ. 15 -. தொழிலாளிக்கு ரூ. 5 - மட்டுமே தருகிறான். அதாவது தொழிலாளியின் ரூ. 10 - மதிப்பான உழைப்புச் சக்தியை ரூ. 5 - கொடுத்து வாங்குகிறான். உண்மையில், 10 மணி நேரம் உழைத்தவனுக்கு 5 மணி நேர உழைப்பிற்கே கூலி கொடுத்து மிகுதி 5 மணி நேர உழைப்பை இலவசமாகப் பெற்றுக் கொள்கிறான். தொழிலாளி ரூ. 5 -ஐக் கொண்டு, தான் உயிர் வாழ அத்தியாவசிய தேவைகளை மட்டும் கவனித்து மறுநாளும் தன் உழைப்புச் சக்தியை விற்க வருகிறான்.

தொழிலாளியிடம் முதலாளி இலவசமாகப் பறித்தெடுத்த 5 மணி நேர உழைப்பையே மார்க்ஸ் உபரி மதிப்பு என்றார். நாள்தோறும், மாதந்தோறும் வருடக்கணக்காக

பலரிடம், நூற்றுக்கணக்கானவர், ஆயிரக்கணக்கானவரிடம் முதலாளி இவ்வாறாக உபரி உழைப்பைப் பறித்துச் சேர்க்கிறான். அதுவே மூலதனம் ஆகிறது. அதை ஆள்பவனே முதலாளி.

முதலாளிகள் காலப்போக்கில் வளர்ந்து ஆதிக்கம் பெறுகின்றனர். இயந்திர உற்பத்தி, பண்ட உற்பத்தியைப் பெருக்குகிறது. பண்டங்கள் சமுதாயத்தில் புதிய உறவுகளை ஏற்படுத்துகின்றன: கிராமங்களில் நிலத்தோடு அடிமைப் பட்டிருந்த மக்கள் நகரங்களுக்கு ஓடி வருகின்றனர். நிலப் பிரபுக்களால் தடுக்க முடியவில்லை. அவர்களது ஆதிக்கம் வீழ்ச்சியடைகிறது.

முதலாளிகள் நிலப் பிரபுகளின் ஆதிக்கத்தை வீழ்த்தி, தமது அரசியலாதிக்கத்தை ஏற்படுத்துகின்றனர். ஒரு வர்க்கம் மற்றோர் வர்க்கத்தின் ஆதிக்கத்தை வீழ்த்துவதும் ஒரு புரட்சியே. இதையே முதலாளித்துவப் புரட்சி, முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி என்பர்.

அன்புள்ள,
அப்பா

# 23. மார்க்சிசம் என்றால் என்ன?

அன்பு மகளே,

முதலாளிகள் ஒருபோதும் தொழிலாளர்களின் உழைப்பின் மதிப்புக்கேற்ற கூலியை வழங்குவதில்லை. தொழிலாளரின் உழைப்புச் சக்தியை எத்தனை மலிவு விலையில் வாங்க முடியுமோ அத்தனை மலிவாகவே வாங்க முயல்வர். தொழிலாளியும் தன் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யத் தன் உழைப்புக்கு உயர்ந்த விலையே பெற முயல்வான். இவை சமுதாயத்தில் ஒருவகை இயைபின்மையை ஏற்படுத்துகின்றன. இதையே முரண்பாடு என்கிறோம்.

இவ்வாறு உழைப்பை மலிவு விலையில் முதலாளி பறித்தெடுக்க முயல்வது முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையில் பகைமை உறவை ஏற்படுத்துகிறது. ஒரு வர்க்கம் மற்ற வர்க்கத்தை அழிக்கவே முயல்கிறது. இதையே பகைமை உறவு என்பர்.

முதலாளி மேலும் மேலும் மூலதனத்தை யந்திரங்களாக்கித் தொழிலாளரின் கோரிக்கைகளை அடக்க முயல்கிறான். தொழிலாளர்கள் அணிதிரண்டு தமது பகைமையைத் தீர்க்க முயல்கின்றனர்.

இத்தகைய இயந்திர வளர்ச்சியும் பகைமைப் போக்கின் வளர்ச்சியும் ஐரோப்பாவில் பல புரட்சி நிலைகளை உருவாக்கின. 1789இல் பிரான்சில் நடைபெற்ற இயந்திரப் புரட்சி பற்றிப் படித்திருப்பாய். அதைத் தொடர்ந்து பல மோதல்கள் ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டன.

இவற்றையெல்லாம் ஆராய்ந்து மார்க்சும், ஏங்கெல்சும் கற்றனர். இருவரும் ஒரே முடிவிற்கே வந்தனர். இருவரு

மாக இணைந்து 1848இல் ஓர் அறிக்கை வெளியிட்டனர். உலக வரலாற்றை விஞ்ஞான ரீதியில் தீர்க்கதரிசனமாக இவ்வறிக்கை வகுத்துக் காட்டியது மட்டுமல்ல, உலக சமுதாயத்தை மாற்றியமைப்பதற்கும் வழி கூறியது. அதுவே '**கம்யூனிஸ்டு கட்சியின் அறிக்கை**' என்பதாகும்.

*'மனித சமுதாயத்தில் இதுவரை நடந்த வரலாறு யாவும் வர்க்கப் போராட்டத்தின் வரலாறாகும்...!'*

இவ்வாறு கம்யூனிஸ்டு அறிக்கை ஆரம்பமாகிறது. (புராதன பொதுவுடைமைச் சமுதாயம் இதற்கு விதிவிலக்காகும்.)

'உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்' என்று கூவி அறிக்கை முடிவுறுகிறது.

முதலாளிகள் யந்திரம், மூலப் பொருட்கள், தொழிற்சாலைகள் போன்ற உற்பத்திச் சாதனங்களைத் தனியுடைமையாக வைத்துக் கொண்டுள்ளனர்; சமூக உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர்; தொழிலாளரின் உழைப்பை ஈவிரக்கமின்றிப் பறித்தெடுக்க முயலுகின்றனர். இவற்றால் தொழிலாளரும் மார்க்ஸ், ஏங்கெல்ஸ் தந்த புரட்சிகரக் கோட்பாட்டை முன் வைத்து, கட்சி அமைத்து ஐக்கியப்பட்டு ஒன்று திரண்டு போராடுகின்றனர். இவ்வர்க்கப் போராட்டம் தவிர்க்க முடியாதது. பாட்டாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்தை அழிப்பதன் மூலமே இவ்வர்க்கப் பகை தீர்க்கப் படுகிறது. பாட்டாளிகள் முதலாளிகளின் ஆதிக்கத்திலுள்ள உற்பத்திச் சாதனங்களைப் பறித்தெடுத்துக் கொள்ளுகின்றனர்.

இவற்றின்மூலம் **தனியுடைமை என்பது அழிந்து, சமூக உடைமை சமூக உற்பத்தி என்ற புதிய சமூக அமைப்பு ஏற்படுகிறது. விலங்கு அடிமை, நில அடிமை, கூலி அடிமை என்ற அடிமைத் தளைகளை உடைத்து மனிதன் விடுதலை பெற்ற நிலை அடைகிறான். அதுவே சோசலிச சமுதாயம் என்பதாகும்.**

இது மார்க்சிய சித்தாந்தத்தின் முக்கிய அம்சமான வர்க்கப் போராட்டமாகும். வரலாற்றுப் பொருள்முதல் வாதம், பற்றி விரிவாக எழுதினேன். இயக்கவியல் பொருள் முதல்வாதம், அரசியல் பொருளாதாரம் ஆகிய இரு அம்சங்கள் பற்றியும் முன்னர் சுருக்கமாகக் கூறினே னல்லவா?

மார்க்சிய சித்தாந்தம் உலகத்திற்கு விளக்கம் கூறுவது மட்டுமல்ல; உலகத்தையே மாற்றியமைக்க வழிகூறும் சித்தாந்தமுமாகும். அரசியற் செயற்பாட்டின் மூலமே சமுதாயத்தை மாற்றி அமைக்க முடியும் என லெனின் இச் சித்தாந்தத்தை விளங்கிக் கொண்டார். ரஷ்ய நாட்டில் 1917இல் புரட்சியை நடத்தினார். புதிய சமுதாயம் ஒன்றைக் கட்டினார். வரலாற்றுப் பாடத்தில் இதை நீ விரிவாகக் கற்பாய்.

அன்புள்ள,
அப்பா

# 24. சோசலிசம் என்றால் என்ன?

அன்பான மகளுக்கு,

உங்கள் பாடசாலையில் இரட்டைப் பிள்ளைகள் இருப்பதாக நீ கூறுவாயே. ஒரே வேளையில் இரு குழந்தைகள் பிறந்தால் இரட்டைக் குழந்தைகள் என்று கூறுகிறோம். அதே போலவே மனித சமுதாயத்திலும் ஒரே வேளையில் இருவகைப் புதிய மனிதர் தோன்றினர்; 1) இயந்திரங்களையும் பிற உற்பத்திச் சாதனங்களையும் கொண்ட முதலாளிகள் 2) அவற்றில் உழைப்பதற்காகக் கிராமங்களை விட்டு வெளியேறி வந்த பாட்டாளிகள்.

இதில் வேடிக்கை என்னவென்றால் இந்த இரட்டைப் பிள்ளைகள் சமூக உறவில் பகைவர்கள். ஒருவரை ஒருவர் அழிக்க முயல்பவர்கள். இது பற்றி முன் கடிதத்திலும் குறிப்பிட்டேன்.

உற்பத்திச் சாதனங்களும் வளர்ச்சியடைகின்றன. மனித சமுதாயம் கூட்டாக வாழ வேண்டியதும் தவிர்க்க முடியாதது. ஆயினும் இப்பகைமை உறவே சமுதாயத்தை பலவகைத் தட்டுகளாகப் பிரித்து வைத்திருக்கிறது. இதனால் சமுதாயத்தில் ஒற்றுமையில்லை; அமைதியில்லை; சமூகமாக உற்பத்தியைப் பெருக்கும் உறவில்லை. உற்பத்திச் சக்திகளைத் தனி உடைமையாகக் கொண்ட சிறுபான்மையினரின் லாபம், விருப்பு, வெறுப்புகளை ஒட்டியே சமூக உற்பத்தி நடைபெறுகிறது. இதனால் உற்பத்தி மனித தேவையைப் பூர்த்தி செய்வதற்கேற்றபடி உயராது தடைப்படுகிறது. இதைக் காலப் போக்கில் உணர்ந்த பாட்டாளிகள் ஒன்று திரண்டு, தனி உடைமையாக இருந்த உற்பத்திச் சாதனங்களை முதலாளிகளிடமிருந்து பறித்தெடுத்துக் கொள்ளுகின்றனர். உற்பத்தியைத் தமது கட்டுப்பாட்டுக்

குள் கொண்டுவருகின்றனர். இந்த உற்பத்தி உறவுகளில் மாற்றம் ஏற்படுகிறது ' என்போம். இதுவே சோசலிச மாகும்.

இப்போராட்டம் பாட்டாளிகள் ஆயுதம் ஏந்திய போராட்டமாகவே நடைபெறும். முன்னைய சமுதாய மாற்றங்கள் ஆயுதப் போராட்டமின்றியும் நடைபெற்றன.

தமது உற்பத்தியை லாபகரமாக்குவதற்காக முதலாளி களே தொழிற்சாலைகளில் வேலைப் பிரிவினையை ஏற்படுத்துகின்றனர். தொழிலாளர்களுக்கு ஒழுங்கு முறை களைக் கற்பிக்கின்றனர். கூட்டு உற்பத்தி சமூக உணர்வை ஏற்படுத்துகிறது. ஒரே வேளையில் தொழிலாளருக்கு இடை வேளை விடுதல் (உணவிற்காக) அவர்களைக் கூடத் தமது துன்பங்களைப் பகிர்ந்து பேச உதவுகிறது. வர்க்க உணர்வு வளர்கிறது. சங்கம் அமைத்துப் பாதுகாப்புத் தேடுகின்றனர். முதலாளித்துவ அமைப்பை ஆயுதம் ஏந்திய புரட்சி மூலமே அழிக்க முடியும் என்ற மார்க்சின் தத்துவத்தை நடைமுறைப் படுத்த முன் வருகின்றனர்.

ரஷ்ய நாட்டில் லெனின் தலைமையில் 1917இல் நடந்த அக்டோபர் சோசலிசப் புரட்சி பற்றிப் படித்திருப்பாய். மார்க்ஸ் எழுதிய சித்தாந்தத்தை நடைமுறைப்படுத்தி லெனின் வெற்றி கண்டார். அங்கு ஜார்மன்னன் ஆட்சி ஒழிந்தது; முதலாளிகள் வீழ்ந்தனர். பாட்டாளிகள் தமது ஆட்சியை ஏற்படுத்தினர். அதைத் தொடர்ந்து இன்றுவரை பல புரட்சிகள் உலகில் நடைபெற்று விட்டன. அடுத்த மிகப் பெரிய புரட்சி சீனாவில் நடந்த புரட்சியாகும். அங்கு விவ சாயிகளையும் தொழிலாளர்களையும் அணிவகுத்து மாவோ தலைமையில் புரட்சி நடைபெற்றது. இது மற்றொரு வர லாற்று முக்கியத்துவம் பெற்ற சம்பவமாகும்.

இப் புரட்சிகள் நடைபெற்ற நாடுகளில் ஏழை, பணக் காரன், முதலாளி என்று எவருமில்லை. வேலையற்றவர் என

எவருமில்லை. எல்லோரும் உழைக்கின்றனர். சாதி, மத, இன, நிற வேறுபாடுகள் கிடையாது. கடன், வட்டி என்ற தொல்லை கிடையாது. உணவு, உடை, வீடு, நீர் எல்லோருக்கும் கிடைக்கிறது.

சமூகத்தில் பகைமை உறவு கிடையாது. முதலாளி என்ற மூத்த பிள்ளையும் தொழிலாளி ஆகி விடுகிறான். உற்பத்திச் சக்திகள் மக்கள் ஆதிக்கத்தில் வந்து விடுகிறது. நாட்டின் செல்வம் அனைத்தும் மக்கள் சொத்தாகிறது. சமூகத் தேவையை ஒட்டி, திட்டமிட்ட உற்பத்தி நடைபெறும். பண்டப் பரிமாற்றம், விநியோகம் ஆகியவையும் சமூக நீதிப்படி நடைபெறும். இது இன்றைய ஏற்றத் தாழ்வுள்ள சமூகத்திலும் பார்க்க உயர்ந்த சமுதாயம் அல்லவா!

அன்பான,
அப்பா

# 25. கம்யூனிசம் என்றால் என்ன?

அன்பான மகளே,

பாட்டாளிகள் என்போர் சொத்து எதுவு மற்றவர்கள். அதனால் இழப்பதற்கு எதுவுமில்லாதவர்களாவர்; அடுத்தது உழைப்பில், உற்பத்தியில் ஈடுபடுபவர். அதனால் சுரண்டப்படுபவர். எதிரியை இனங்காணக்கூடிய வர்க்கத் தவரும் இவரே. ஒன்றுமற்ற பிச்சைக்காரர் பாட்டாளி களாகார். ஏனெனில் அவர்கள் உழைப்பில் ஈடுபடுவ தில்லை.

பாட்டாளிகள் முதலில் அமைக்கும் சமுதாயமே சோசலிச சமுதாயமாகும். இச் சமுதாயம் புதிய உற்பத்தி உறவு, புதிய அரசியல், புதிய கலாசாரம், பண்பாடும் கொண்ட சமுதாயமாகும். சுய நலமற்ற, சமுதாய உணர்வு மிக்க சமுதாயமாகும். இச்சமுதாயத்திலேயே மனித அடிமை விலங்குகள் அகற்றப்படுகின்றன. முதலாளித்துவத் தில் கூலி அடிமையாக மாறிய மனிதன் இங்குச் சுதந்திரம் பெறுகிறான்; நிர்வாகத்திலும் உபரியைத் தீர்மானிப்ப திலும் உரிமை பெறுகிறான்.

இங்கு உழைப்பவனுக்கே உண்ண உரிமைகள் உண்டு. உழைக்க முடிந்தவர்கள் அனைவரும் உழைப்பர். உற்பத் திச் சாதனங்கள் யாவும் சமூகத்தின் கூட்டுச் சொத்தாக இருக்கும். திறமைக்கேற்ற உழைப்பு, உழைப்பிற்கேற்ப பண்டங்கள் பெறலாம்.

பண்ட உற்பத்தி பெருக, காலப்போக்கில் எல்லோருக் கும் தேவைக்கேற்பப் பண்டங்கள் கிடைக்கும். அக்காலத் தில் திறமைக்கேற்ப உழைப்பு, தேவைக்கேற்பப் பண்டங்கள் கிடைக்கும். அக்கால கட்டமே கம்யூனிசம் ஆகும்.

உற்பத்திக் கருவிகள் வளர்ச்சி பெறா நிலையிலேயே புராதன கம்யூனிசம் இருந்தது. இக்கம்யூனிசம் மனித சமுதாய வளர்ச்சியின் உயர்ந்த கட்டமாகும்.

ஆகவே சோசலிசம் என்பது கம்யூனிசத்திற்குச் செல்லும் இடைப்பட்ட காலமாகும். சோசலிசத்தில் பாட்டாளிகளின் சர்வாதிகாரம் நிலை நிறுத்தப்படும். முதலாளிகளின் சர்வாதிகாரம் ஒடுக்கப்பட்டுவிடும்.

உற்பத்திக் கருவிகளின் ஆரம்பவளர்ச்சிக் கட்டத்தில், உபரி உற்பத்தி செய்ய மனிதன் ஆரம்பித்த வேளையில், அடிமைச் சமுதாயம் தோன்றியது. ஆகவே வர்க்க சமுதாயம் தோன்ற வழி வகுத்தது என முன்னர் படித் திருப்பாய்.

இதன் பின்னர் நிலப்பிரபுத்துவ சமுதாயம், முதலா ளித்துவ சமுதாயம் என வளர்ந்தது. இவ்வளர்ச்சிப் போக்கில் சோசலிச சமுதாயம், கம்யூனிச சமுதாயம் தோன்றுவது தவிர்க்க முடியாத வரலாற்று உண்மை என்பதே மார்க்சிய சித்தாந்தமாகும்.

கம்யூனிச சமுதாயத்தில் அரசு என்ற பலாத்கார வடிவம் உதிர்ந்து விடும். அரசு மனித வரலாற்றில் இடைக் காலத்தில் தோன்றிய வடிவமே. வர்க்கமற்ற சமுதாயம் மீண்டும் ஏற்படும்போது இப்பலாத்கார அமைப்பு உலர்ந்து விடும்.

உலக வரலாற்றைத் திரும்பப் பார்க்கும்போது இந்த உண்மை, தெள்ளெனத் தெளிவாகத் தெரியவில்லையா? இது ஒரு விஞ்ஞான பூர்வமான அணுகுமுறை. இதை நீ தெளிவாகத்தெரிந்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே இக்கடிதங்களை எழுதினேன்.

இப்புதிய சமுதாயத்தில் பெண்ணடிமைத்தனமும் ஒழிந்துவிடும். ஆணும் பெண்ணும் அனைத்திலும் சம உரிமையுடன் வாழ்வர். ஆணுடைய சொத்துக்காக பெண்

குழந்தை பெறும் நிலை மறைந்துவிடும். சமுதாயத் தேவையை ஒட்டியே குழந்தை பெறுவர். குழந்தையின் தேவை அனைத்திற்கும் சமூகம் பொறுப்பேற்கும். குடும்பத்திற்காக சமைத்தல், துவைத்தல், வீடு பேணல் போன்ற மேலதிக வேலைப்பழுக்கள் குறைந்துவிடும்.

உலக வரலாறு அடிமைத்தளையுடன் ஆரம்பிக்கவில்லை. அடிமைத்தளையோடு முடியப் போவதுமில்லை.

மீண்டும் ஒரு தடவை இவற்றைப்படி. இன்றைய வர்க்க சமுதாயத்திற்குச் சேவை செய்வதற்காகவே, அரசு, சட்டங்கள், மதம், சாதிப்பாகுபாடு, கல்வி, கலை இலக்கியங்கள் என்ற மேல்மட்ட அமைப்புகள் ஏற்பட்டன என்பதையும் காலப்போக்கில் விரிவாக உணர்ந்து கொள்வாய்.

வர்க்க சமுதாயம் உடைத்தெறியப்படும்போது இம் மேல்மட்ட அமைப்புகளும் தகர்க்கப்படும். தற்போது நீ கற்கும் கல்விமுறையும் கூட வே தா ன். ஆகவே நீ கற்கும் கல்வி, சமுதாயம் பற்றிய அறிவையும் உணர்வையும் வளர்ப்பதற்கும் பயன்படவேண்டும்; நீயும் உற்பத்தியில் ஈடுபட கல்வி உதவவேண்டும்; அல்லது நீ கற்ற கல்வி பயனற்ற கல்வியாகும் என்பதையும் மறந்து விடாதே. என் அன்பான வாழ்த்துகள்.

அன்புள்ள,
அப்பா

# குந்தவிக்குக் கடிதங்கள்

இக்கடிதங்கள் மூலம் கூறப்படுவது மன்னர்
வரலாறு அல்ல; அவர்களது வீரதீரச் செயல்களல்ல
மனித இன வரலாறு; விஞ்ஞான பூர்வமான வர
தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள் அ
எளிதில் புரிந்து கொள்ளத்தக்கதாக எழுதப்பட்டுள்

இன்று நம் நாட்டுப் பள்ளிகளில் கற்பிக்கு
லாற்றின் கதாநாயகர் மன்னர்களே; மக்களல்ல;
லாறு உற்பத்திக் கருவிகளின், உழைப்பவர்களின் வ
பற்றியதல்ல. கற்பனுவாத வரலாறேயாகும்.

ஐக்கிய நாடுகள் சபையின் கல்விப் பகுதி
உற்பத்தி முறைகளின் வளர்ச்சியை ஒட்டியே வ
றைக் கற்பிக்கும்படி வேண்டுகின்றனர். அவர்
தயாரிக்கப்பட்ட 'வரலாற்று நூல்' (History Book)
நீண்ட கார்ட்டூன் திரைப்படத்தைப் பார்த்தவர் இ
மையை அறிவர். நடைமுறையில் இம்முறையாக வ
பாடசாலைகளில் கற்பிக்கப்படுவதில்லை. இது வியப்

குரங்கு நிலையிலிருந்த ஆதி மனிதன் கல்லைக்
யாக எடுக்கிருன். இன்று உலகம் முழுவதும் சே
சமுதாயத்தைக் கட்டி எழுப்ப முன் நிற்கிருன்.
வளர்ச்சியின் வரலாற்றையும் அதன் விதி முறை
இச்சிறு நூல் எளிமையாகக் கூறுகிறது.

Wrapper Printed at :
Eskay Art Printers, Madras-5. Phone : 844727